GOKULAM

ஆகஸ்ட் 2008 ✧ விலை ரூ.8/- ✧ 80 பக்கங்கள்

கோகுலம்

குழந்தைகளின் குதூகலம்!


ஒலிம்பிக் ஸ்பெஷல்!




வண்ணத்துப்பூச்சியும் சின்ன தேவதையும்!

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


601

602

603

604

605


606

607

608

609

610


611

612

613

614

615


616

617

618

619

620


621

622

623

624

625

கோகுலம்

ஆகஸ்ட் 2008 மலர் : 26 இதழ் : 7

உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் – பாரதியார்

இந்த மாதம் பீஜிங்கில் 'ஒலிம்பிக்' போட்டிகள் கோலா கலத்துடன் தொடங்குகிறது. சீனாவும் இந்தியாவும் மனித வள சக்தியில் அடுத்தடுத்த இடங்களில் இருப்பவை. ஆனால், ஒவ்வொரு முறையும் ஒலிம்பிக் போட்டி முடிந்தபின் பதக்கப் பட்டியலைப் பார்த்தால் வருத்தமாக இருக்கும். சீனா, முதல்



உற்சாக டானிக்!

மூன்று இடங்களுக்குள் இருக்கும். இந்தியாவைத் தேடித்தான் கண்டு பிடிக்க வேண்டும். இந்திய ஹாக்கி அணி இந்த முறை ஒலிம்பிக்கில் விளையாடவே தகுதி பெறவில்லை.

கிரிக்கெட்டுக்குத் தரும் முக்கியத்துவத்துல, பாதியைக்கூட மற்ற விளையாட்டுக்கு நாம் கொடுக்காததும் ஒரு காரணம். விளையாட்டு என்பது உடலுக்கும் மனத்துக்கும் உற்சாகம் தரும் டானிக். அதில் ஈடுபடுபவர்களுக்கு மட்டுமின்றி ரசிப்பவர்களுக்கும் அந்த டானிக் கிடைக்கும். ஆகவே, நீங்களும் ஏதாவது ஒரு விளையாட்டைத் தேர்ந்தெடுத்து, தினமும் அதற்கென சிறிது நேரம் ஒதுக்கி பயிற்சி செய்யுங்கள். வருங்கால ஒலிம்பிக்கில் பதக்கங்களைக் குவித்து முதல் மூன்று இடங்களுக்குள் வரவேண்டும். முயன்றால் முடியாததும் உண்டோ?

அன்புடன்
கோகு

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி
உதவி ஆசிரியர் :
ஆரணி யுவராஜ்
வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
ச.கார்த்திகேயன்

தொலைபேசி :
044 - 4343 8888
(30 lines)
தொலைநகல் :
044 - 4343 8899
மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com
விளம்பரப் பிரிவு :
marketing@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com


சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ. 96/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : ரூ. **1000/-**

Bharathan Publications
Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

குழந்தைகளின் குதூகலம்!



வெல்கம் பீஜிங்!



- மொத்தம் 28 விளையாட்டுப் போட்டிகளில் 302 பிரிவுகளில் போட்டிகள் நடைபெறுகிறன்றன.

- பீயூவா' எனப்படும் பொம்மைகள் அடையாளச் சின்னங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. பீயூவா என்பது ஐந்து பொம்மைகள் ஆகும். இவை 'அதிர்ஷ்ட பொம்மைகள்' என அழைக்கப்படுகின்றன.

- ஐந்து பொம்மைகளின் பெயர்கள்: *பெய் பெய்* (BEI BEI), *ஜிங் ஜிங்* (JING JING), *யிங் யிங்* (YING YING), *யுவான் யுவான்* (HUAN HUAN), *நி நி* - (NI NI)

இந்த இதழில் உள்ள ஒலிம்பிக் பிட்ஸ் அனைத்தையும்
தொகுத்தவர்: **முனைவர் ஆசுரா**

பெரியோர் சொல்...

கதை : என். கோதண்டராமன்
படம் : பிள்ளை




எங்களுக்கு ரொம்ப பிடிச்ச உணவு!
ஓ! நீங்க இதைத்தான் சாப்பிடுவீங்களா? ரொம்ப சுவையா இருக்கு. அண்ணே ஒரு உதவி...
என்ன? சொல் தம்பி!
இப்ப எனக்குக் கொஞ்சம் தேனை எடுத்துக் கொடுக்கறீங் களா?
அப்படி நினைச்சதும் முடியாது. பக்குவம் பார்த்து எடுக்கணும். இல் லைன்னா ஆபத்து. நாளைக்கு வா, நிறையவே தரேன்.
கரடி சென்றுவிட்டது. ஆனால்...
எனக்குக் கொடுக்கக் கூடாதுன்னு இப்படிச் சொல்லிட்டுப் போறியா? நீ உதவலைன்னா எனக்கே எடுத்துக்கத் தெரியாதா? போ! போ!


நரி ஒரு நீளமான குச்சி யைத் தேடியெடுத்து...
அடுத்த நொடி....
ஆ! உதவி... உதவி...
சிறிது நேரத்துக்குப் பின்-
சே! கரடி அண்ணன் பேச்சைக் கேட்டிருந்தா இப்படி நடந்திருக்குமா? எனக்கு இது தேவைதான்!

உறுப்பினர் பக்கம்





- கடிகாரத்தைக் கண்டுபிடித்தவர் மான்ஃப்ரீடி (இத்தாலி).
- ஸ்கூட்டரைக் கண்டுபிடித்தவர் கிரெவில் பிராட்ஷா
- தீப்பெட்டியைக் கண்டுபிடித்தவர் வேண்ட்ஸ் டார்ம்.
- பலூனைக் கண்டுபிடித்தவர் ஜேக்யூஸ் மற்றும் ஜோசப் மாண்ட்ஃகோல்பியர்.
- நீராவிக் கப்பலைக் கண்டுபிடித்தவர் ஜே.சி.பெர்ரியார்.
- மோட்டார் சைக்கிளைக் கண்டுபிடித்தவர் ஜி.டெய்மலர்.
- பேனாவைக் கண்டுபிடித்தவர் லூயிஸ் ஜே.வாட்டர்மேன்.
- பாராசூட்டைக் கண்டுபிடித்தவர் ஏ.ஜெ.கார்னெரின்.
- மின்சார இஸ்திரி பெட்டியைக் கண்டுபிடித்தவர் ஹெச்.டபிள்யு.சீலி.
- எஃகைக் கண்டுபிடித்தவர் ஹாரி பிரியர்ஸி.
- இயந்திர துப்பாக்கியைக் கண்டுபிடித்தவர் ஜேம்ஸ் பக்கிள்.
- ஏர் கண்டிஷனர் அமைப்பைக் கண்டுபிடித்தவர் கேரியர்.
- ஒலிப்பெருக்கியைக் கண்டுபிடித்தவர் ஹொரேஸ் ஷார்ட்.
- சைக்கிளைக் கண்டுபிடித்தவர் கிரிக்பாட்ரிக் மாக்மில்லன்.
- தெர்மாமீட்டரைக் கண்டுபிடித்தவர் காப்ரியாஸ் ஃபாரன்ஹீட்.



- நா.ஜனார்த்தனம்,
உறுப்பினர் எண் : 274
பத்தாம் வகுப்பு,
காமராஜ் மேல்நிலைப் பள்ளி,
நம்பியூர்

கண்டுபிடித்தவர்கள்...



* மார்டின் கூப்பர்

கிரேட்

* கணிப்பொறியின் தந்தை
  சார்லெஸ் பாபேஜ்
* தமிழ் உரைநடையின் தந்தை
  வீரமா முனிவர்
* செல்ஃபோனின் தந்தை
  மார்டின் கூப்பர்

முயன்றால்

14 வயதுக்கு உட்பட்டவர்கள் குழந்தைகள் எனப்படுகின்றனர். அவர்களை வேலையில் நியமிக்கக் கூடாது என்று இந்திய அரசு அறிவித்துள்ளது.

வளரும் நாடுகளில் பல லட்சம் குழந்தைகள் தீப்பெட்டி, துணி தைக்கும் தொழிற்சாலைகள், உணவு விடுதிகள், பட்டாசு தொழிற்சாலைகள் ஆகியவற்றில் பணிபுரிகிறார்கள். சிலர் பிச்சை எடுப்பதில் ஈடுபடுகின்றனர்.

உலகம் முழுவதும் 75 கோடியும், இந்தியாவில் சுமார் 18.56 கோடி குழந்தைத் தொழிலாளர்கள்


தாஜ்மஹால்

தம் மனைவி மும்தாஜுக்காக தாஜ்மஹாலைக் கட்டியவர் ஷாஜஹான்.

தாஜ்மஹால் கட்ட பயன்படுத்தப்பட்ட வெண்மை நிற சலவைக்கல்லின் பெயர் 'மக்கரானா' சலவைக்கல்.

தாஜ்மஹாலின் முன்னோடி என்று அழைக்கப்படும் கல்லறை 'ஹுமாயூன் கல்லறை.'

ஹுமாயூன் கல்லறையைக் கட்டியவர் 'ஹாஜி பேகம்' (ஹுமாயூன் மனைவி).



ஹுமாயூன் கல்லறைக்கும் தாஜ்மஹாலுக்கும் கட்டடக் கலை ரீதியாக ஒரு இணைப்பாக இருந்த கல்லறை 'அப்துல் ரஹீம்-கான்- இ-கனான்' கல்லறை.

- கி.ஜெய்பிரியா,
உறுப்பினர் எண்: 378,
யு.கே.ஜி., சக்தி மெட்ரிக் பள்ளி, விருத்தாசலம்

தந்தைகள்!

- இந்திய சினிமாவின் தந்தை தாதா சாஹேப் பால்கே
- இந்திய விண்வெளி இயலின் தந்தை விக்ரம் சாராபாய்
- சமூகவியலின் தந்தை அகஸ்டஸ் கொம்டி.

- ப.பத்மபிரியா,
உறுப்பினர் எண் : 516, பன்னிரண்டாம் வகுப்பு,
பெ.சி.சிதம்பர நாடார் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, விருதுநகர்

முடியும்!



உள்ளனர்.

முயற்சி செய்தால் எதுவும் முடியும். குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்க நம்மால் முடிந்த முயற்சிகளைச் செய்வோம்.

- பா.கஜேந்திரகுமார்,
உறுப்பினர் எண்: 534,
எட்டாம் வகுப்பு, சுவாமி
விவேகானந்தா உயர்நிலைப் பள்ளி,
நிலக்கோட்டை

தெரிஞ்சுக்கலாம்!

இந்தியாவின் பூந்தோட்டம் - பெங்களூரு
இந்தியாவின் பொற்கோயில் நகரம் - அமிர்தசரஸ்
இந்தியாவின் அரண்மனை நகரம் - கொல்கத்தா
இந்தியாவின் விளையாட்டு மைதானம் - காஷ்மீர்
இந்தியாவின் நறுமணத் தோட்டம் - கேரளா
இந்தியாவின் நீலமலைகள் - நீலகிரிக் குன்றுகள்



- ம.ப்ரியா, உறுப்பினர் எண்:197,
5ஆம் வகுப்பு, ரு.க.வி.மேனிலைப் பள்ளி,
கோவை - 42

தொடர்கதை

"**எ**ன்ன சத்தம் அது?"

பொன்முகிலன் தனது வலியையும் மீறி வியப்புடன் கேட்டார். ஒரு வீரன் வேகவேகமாக வெளியே சென்று பார்த்தான். அடுத்த கணம் அதிர்ச்சியில் உறைந்துவிட்டான்.

பூமியைப் பிளந்துகொண்டு அந்த விநோதமான உருவம் மேலே வந்தது. யானையைப் போன்று பெரிய கால்கள் இரண்டு, அவற்றில் கூர்மையான நகங்கள். ஒட்டகம் போன்ற உடல், ஒட்டகச்சிவிங்கி போல் நீளமான கழுத்து, பெரிய அளவு கழுகைப் போன்ற முகம், உடலின் இரு பகுதிகளிலும் இறக்கைகள்.



வீரா-சூரா

மக்கள் அலறியடித்து ஓடினார்கள். வீரர்கள் அதனை நோக்கி அம்புகளை எய்தார்கள், ஈட்டியை எறிந்தார்கள். அது எதற்கும் அசரவில்லை. தனது பெரிய கால்களாலும் இறக்கைகளாலும் வீரர்களைப் பந்தாடியது. அரண்மனை கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்தது.

''அரசே ஆபத்து... விநோதமான மிருகம்... இல்லை... பறவை... அரண்மனைக்குள்...'' என்று பயத்தில் பேச முடியாமல் திணறினான் ஒருவீரன்.

பொன்முகிலன் கட்டிலைவிட்டு எழ முயன்றார். மந்திரி தடுத்தார். ''அரசே, நீங்கள் போக வேண்டாம். இந்தக் கொப்புளங்கள், விநோதமான மிருகம்... அடுத்தடுத்து நடக்கும் விபரீதங்களைப் பார்க்கும்போது விஷயம் புரிகிறது. இது தீய சக்திகளின் வேலை. இந்தச் சமயத்தில் நீங்கள் பாதுகாப்புடன் இருக்க வேண்டும்'' என்றார்.



''ஆம் அரசே, நீங்கள் அறைக்குள்ளேயே இருங்கள். என்னை மீறி அது இங்கே வராது'' என்று வாளை உறுவினார் தளபதி.

எல்லோரும் வற்புறுத்தி பொன்முகிலனை அறைக்குள்ளேயே தங்க வைத்து கதவை மூடினார்கள். தளபதி வெளியே வந்தார். அந்த உருவம் செடி, கொடிகளைத் துவம்சம் செய்தவாறு விசித்திரமாக சப்தமிட்டபடி வந்தது. வாளுடன் பாய்ந்த தளபதியைக் காலால் எட்டி உதைத்தது. அவர் பாய்ந்து இறக்கையைப் பிடித்தார். அது ஒரு விசிறு விசிற, புயல் காற்று வீசியதுபோல் தூரத்தில் போய் விழுந்தார். அது பறந்து உப்பரிகையை அடைந்தது.

அங்கிருந்த அறையில்தான் பொன்முகிலன் இருந்தார். அது உள்ளே குதித்தது. ராணி அலறினார். அங்கிருந்த வீரர்கள் ஈட்டியை எறிந்தார்கள். அந்தப் பறவை, கட்டிலை நெருங்கியது. கோழிக் குஞ்சைத் தூக்குவதைப் போல் அரசரை தனது அலகால் தூக்கியது. அடுத்த நொடியே உப்பரிகைக்குத் தாவி, வானத்தில் பறந்தது. சில நிமிடங்களில் புள்ளியாய் மறைந்துபோனது. எல்லோரும் செய்வதறியாது திகைத்து நின்றார்கள்.

வீரபத்ரனின் குருகுலம். மின்னல் வேகத்தில் குதிரையில் வந்து இறங்கினான் அந்த வீரன். அப்போது வீரபத்ரன் எல்லோருக்கும் வில்

வாண்டுதாசன்

பயிற்சியைக் கற்பித்துக் கொண்டிருந்தார்.

''குருவே வணக்கம்! அரண்மனையிலிருந்து அவசரச் செய்தி. தாங்கள் உடனடியாக அரண்மனைக்கு வர வேண்டும். உங்களுடன் இளவரசரும் வந்தால் நன்று'' என்று பணிவுடன் சொன்னான்.

''என்ன விஷயம்?''

''ஒரு விபரீதம் நடந்துவிட்டது'' என்றவன் விஷயத்தைச் சொன்னான்.

எல்லோரும் திகைத்தனர். தங்க முகிலன், ''அப்பா'' என அலறி விட்டான்.

வீரபத்ரன், அவனை ஆறுதலுடன் தட்டிக் கொடுத்தார். ''பயப்படாதே முகிலா! உன் தந்தைக்கு எதுவுமாகாது. ஒருவனின் அழிவுக்கான ஆரம்பம்தான் இது. தயாராக இரு! இதோ, நொடியில் வருகிறேன்'' என்று கூறி உள்ளே சென்றார்.

சற்று நேரத்தில் திரும்பி வந்தார். அவர் கையில் மந்திரவாள் பெட்டி. ''கேசவா! நீயும் எங்களுடன் வா'' என்றார்.

வீரபத்ரன் ஒரு குதிரையில் ஏறிக் கொண்டார். தமக்கு முன்பாக முகிலனை அதில் அமர்த்திக் கொண்டார். கேசவன், அரண்மனை வீரனின் குதிரையில் ஏறிக்கொண்டான்.

''சந்திரா! நான் வரும்வரை குருகுலத்தைக் கவனித்துகொள், மற்ற மாணவர்களுக்குப் பயிற்சி கொடு'' என்றார் வீரபத்ரன்.

''ஆகட்டும் குருவே'' என்று வணங்கினான் அந்தப் பெரிய மாணவன்.

குதிரைகள் இரண்டும் புயலாகப் பறந்தன. அந்த வேகத்துக்குப் பயந்து சிங்கம், புலி போன்ற மிருகங்கள் குகைக்குள் ஓடி பதுங்கின. வீரபத்ரன் ஆறுதல் சொல்லியிருந்தாலும் தங்கமுகிலனின் மனம் கலக்கத்திலேயே இருந்

ஒலிம்பிக் பிட்ஸ்...

❖ *1956ஆம் ஆண்டு மெல்போர்னில் நடைபெற்ற ஒலிம்பிக்ஸ் போட்டியை நெதர்லாந்து, ஸ்பெயின் சுவிட்சர்லாந்து போன்ற நாடுகள் புறக்கணித்தன.*



❖ *முதல் உலகப் போரினால் 1916ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியும், இரண்டாவது உலகப் போரினால் 1940, 1944 ஒலிம்பிக் போட்டிகளும் கைவிடப்பட்டன.*

தது.

அரண்மனை.

வீரபத்ரனின் பாதங்களைத் தொட்டு வணங்கினார் ராணி. பணிவுடன் வரவேற்றார் மந்திரி.

''யாரும் கலங்க வேண்டாம். அரச



ருக்கு எதுவுமாகாது. இதெல்லாம் அந்த சூரபத்ரனின் வேலை'' என்றார்.

''சூரபத்ரனா? யார் அவன்?'' என்று கேட்டார் தளபதி.

''சொல்கிறேன். அதற்கு முன்பு மாணிக்கம் இங்கே வர வேண்டும்'' என்றார்.

''மாணிக்கமா?''

''அரண்மனை விதூஷகனின் மகன் மாணிக்கம்''

''வணக்கம் குருவே'' என்றபடி கூட்டத்திலிருந்து முன்னால் வந்தார் விதூஷகன் விமலன்.

''விமலா! உன் மகன் எங்கே?''

''பாட்டியின் இறுதிச் சடங்கு முடிந்ததுமே மாணிக்கம் குருகுலத்துக்குச் செல்வதாகக் கூறி கிளம்பிவிட்டான். ஆனால், அதை அவன் சொன்ன விதமே சரியில்லை. பதற்றமாக இருந்தான். பொய் சொல்வதாகத் தோன்றியது. இப்போது நீங்கள் அவனைத் தேடுகிறீர்கள்... இங்கு நடந்த சம்பவங்களுக்கும் அவனுக்கும் ஏதாவது தொடர்பு இருக்கிறதா?'' என்று பயத்துடன் கேட்டார் விமலன்.

அப்போது காகம் ஒன்று பறந்து வந்தது. அதன் வாயில் ஒரு ஓலை. அதைக் கீழே போட்டுவிட்டு, பறந்து சென்றது. தளபதி அதனை எடுத்து வீரபத்ரனிடம் கொடுத்தார்.

'வீரபத்ரா! மாணிக்கத்தை நான்தான் அழைத்துச் சென்றேன். உனது திட்டம் எனக்குத் தெரியும். அது பலிக்காது. மூன்று சக்திகளில் ஒன்று என் கைப்பிடிக்கு வந்துவிட்டது. என்ன செய்யப் போகிறாய்?' என்று அதில் குறிப்பிட்டிருந்தது.

வீரபத்ரன் புன்னகைத்துக் கொண்டார். ''முகிலா! கேசவா! வாருங்கள் புறப்படுவோம். தளபதி! நீங்களும் வாருங்கள்'' என்றார்.

''எங்கே போகிறோம்? எப்படிப் போகிறோம்?'' என்று கேட்டான் கேசவன்.

''அந்த விநோத உருவம் பூமியைப் பிளந்து கொண்டுதானே வந்தது. நாமும் அப்படியே போவோம். ஒருவர் கையை மற்றொருவர் பிடியுங்கள்'' என்ற வீரபத்ரன், தமது கையை நீட்டினார்.

முகிலன் பற்றினான். அவனது கையை கேசவன் பிடித்தான். தளபதி, கேசவன் கையைப் பிடித்தார். சூரபத்ரன் ஒரு மந்திரத்தை உச்சரித்தார். அடுத்த நொடி, தரை பிளந்து, நால்வரையும் உள்வாங்கியது.

(தொடரும்)



ஹாய் ஃப்ரண்ட்ஸ்! என்னோட பேரு ஸ்ரீலக்ஷ்மி. 'வண்ணத்துப்பூச்சி' தமிழ் சினிமாவுல நடிச்சிருக்கேன். திருப்பூர் செயின்ட் ஜோசப் ஸ்கூல்ல நாளகாம் வகுப்பு படிக்கறேன். இது என் தம்பி விஷ்ணு. அப்பா உன்னி மேனன், பிஸினஸ்மேன். அம்மா ஷோபனா ஹவுஸ் ஒய்ஃப். எனக்கு தாய்மொழி மலையாளம். ஆனா, தமிழ் ரொம்ப நல்லா பேசுவேன். என்னை 'வண்ணத்துப்பூச்சி' படத்துல நடிக்க வெச்சு, தமிழ்நாடு முழுக்க தெரிய வெச்ச டைரக்டர் அழகப்பன் சாருக்கு 'கோகுலம்' மூலமா என்னோட நன்றியைத் தெரிவிச்சுக்கறேன்!

கவர் ஸ்டோரி



என்னோட பெஸ்ட் ஃப்ரண்ட் கீர்த்தனா. லன்ச், பேனா, பென்சில் எல்லாம் அவகிட்டே ஷேர் பண்ணிப்பேன். எப்பவாவது எங்களுக்குள்ளே சண்டை வரும். அன்னிக்கு முழுக்க 'டு' விட்டுட்டு பேசாம இருப்பேன். ஆனா, அடுத்த நாளே 'பழம்' விட்டு பேசிடுவேன். தம்பி விஷ்ணு விஷயத்திலும் அப்படித்தான். அடிக்கடி சண்டை வரும். அப்புறம் ஒண்ணு சேர்ந்துடுவோம்!

பேட்டி : யுவா, அட்டை மற்றும் படங்கள்: ஸ்ரீஹரி மற்றும் வண்ணத்துப்பூச்சி படக் காட்சிகள்



இந்தப் படத்துல வர்ற பாலாசிங் தாத்தா மாதிரி நிஜத்துல எனக்கு தாத்தா, பாட்டி கேரளாவுல இருக்காங்க. ஒவ்வொரு லீவுக்கும் அங்கே போய்டுவேன். தாத்தா நிறைய கதைகள் சொல்வார்!

வண்ணத்துப்பூச்சியும் சின்ன தேவதையும்!

எனக்கு ரொம்ப பிடிச்ச விளையாட்டு ஷட்டில் காக், த்ரோபால்... இந்தப் படத்து மூலமா நிறைய புது விளையாட்டுகளைக் கத்துக் கிட்டேன். அதெல்லாம் எனக்கு ரொம்ப பிடிச்சுப் போச்சு. மாலை நேரத்துல இயற்கை காற்று வீச, வெளியில விளையாடறது ரொம்ப நல்லது தெரியுமா?... எனக்கு ரொம்ப பிடிச்ச சாமி கிருஷ்ணர். குருவாயூருக்குப் போறப்ப எல்லாம் சாமி ஃபோட்டோ, மோதிரம் நிறைய வாங்கி வந்து ஃப்ரண்ட்ஸ் எல்லோருக்கும் கொடுப்பேன்!



பாவாடை-சட்டையில நான் எப்படி இருக்கேன்? நிஜத்திலும் இந்த மாதிரி எங்கிட்ட நாலு இருக்கு. ஆனா, எனக்கு ரொம்ப பிடிச்சது ஜீன்ஸ்தான். அப்புறம்... சாக்லெட் பிடிக்கும். தினம் ஒண்ணு சாப்பிடுவேன். அதே நேரம் நிறைய பழங்கள், காய்கறிகளைச் சாப்பிடுவேன். ஏன்னா, அதுதான் உடம்புக்குச் சக்தி கொடுக்கும். நீங்களும் நிறைய சாப்பிடுங்க!



படத்துல நான் நல்லா டான்ஸ் பண்ணினதுக்கு நிறைய பேர் பாராட்டினாங்க. 'எங்க கத்துக்கிட்டே'ன்னு கேட்டாங்க. நான் யார்கிட்டேயும் போய்க் கத்துக்கல. டி.வி.யில டான்ஸ் புரோகிராமைப் பார்த்தே கத்துகிட்டேன். நல்லா பெயின்ட் பண்ணுவேன்.பரிசுகூட வாங்கி இருக்கேன்!





இந்தப் படத்துல தாத்தாவுக்கு உடம்பு சரியில்லாதப்ப கவனிச்சுக்கற மாதிரி ஒரு சீன் இருக்கு. அதே மாதிரி அம்மாவுக்கு ஒருமுறை உடம்பு சரியில்லாதப்ப, அப்பாவுக்கு ஃபோன் பண்ணி சீக்கிரம் வரச் சொல்லி ஆஸ்பத்திரிக்கு கூட்டிட்டுப் போனேன். அம்மா, அப்பா நமக்காக எவ்வளவோ கஷ்டப்படறாங்க. அவங்களுக்கு எப்பவாவது உடம்பு சரியில்லாம போனா, நாமதானே 'ஹெல்ப்' பண்ணணும். நான் சொல்றது சரிதானே?

இன்னொரு முக்கியமான விஷயம். நான் முதல் முதல்ல தியேட்டருக்குப் போய்ப் பார்த்த படம் எது தெரியுமா? 'வண்ணத்துப்பூச்சிதான்'! அதுக்கு முன்னாடி டி.வி.யில மட்டும்தான் படம் பார்ப்பேன். தியேட்டர்ல அவ்வளவு பெரிய ஸ்கிரீனைப் பார்த்ததும் ஆச்சர்யமா இருந்தது. சரி, நீங்களும் அப்பா, அம்மாவை கூட்டிட்டு 'வண்ணத்துப்பூச்சி' படத்துக்கு மறக்காம வாங்க. உங்களை அங்கே 'மீட்' பண்றேன். பை! பை!!



• அருண் சரண்யா •

தப்பாட்டம்!

“இன்னைக்கு நாம தப்பாட்டம் பார்க்கலாம்'' என்றார் சித்தப்பா.

''நான் தயார்'' என்றாள் தமிழ்ச்செல்வி. அவளுக்குக் கிராமியக் கலைகள் பிடித்திருந்தது. ரஞ்சனுக்கு நாட்டுப்புறக் கலைகள் பற்றி விளக்குவது பெருமையாக இருந்தது.

ரஞ்சன் கேட்டான். ''தப்பாட்டம் ஆடறது தப்பில்லையா?''

''இதிலே என்ன தப்பு?'' என்ற சித்தப்பா, அடுத்த நிமிடமே சிரித்தார். விளையாடும்போது யாராவது அழுகுணி ஆட்டம் ஆடுவதை - தப்பாட்டம் என்பதுண்டு. ஆங்கிலத்தில் இதை 'ஃபவுல்' (FOWL) என்பார்கள். அப்படி நினைத்துதான் ரஞ்சன் இந்தக் கேள்வியைக் கேட்டான் என்பது புரிந்தது.

''நாம போறது தப்பாட்டம்னாலும் அது ரைட் ஆட்டம்தான்'' என்றார். இப்போது தமிழ்ச்செல்வியும் சிரித்தாள்.

ரஞ்சனுக்குக் கோபம் வந்தது. ''நான் கேட்டதிலே என்ன தப்புங்கறதைச் சொல்லிட்டுச் சிரிக்கலாமே'' என்றான்.

''தப்பாட்டத்திலே வரும் தப்புங்கற வார்த்தை, சரிங்கற வார்த்தைக்கு எதிர்ப்பதம் இல்லே. நாயனம், பியானோ மாதிரி அது ஓர் இசைக் கருவிதான். பறைன்னும் சொல்வாங்க. அதை



வாசிச்சுக்கிட்டே ஆடுவதைத்தான் தப்பாட்டம்னு சொல்றாங்க'' என்று சித்தப்பா விளக்கினார்.

அவர்கள் சென்றபோது நிகழ்ச்சி தொடங்கவில்லை. இன்னும் பத்து நிமிடங்கள் ஆகும் என்றார்கள். ''அங்கே பாரு, அவங்கதான் ஆடறவங்க'' என்று சற்றுத் தொலைவில் சுட்டிக்காட்டினாள் தமிழ்ச்செல்வி.

அங்கே சிலர் உட்கார்ந்து தங்கள் கையிலிருந்த இசைக் கருவியை நெருப்புக்குச் சற்று மேலே காட்டிக் கொண்டிருந்தார்கள். தப்பு என்ற அந்த இசைக் கருவி வட்ட வடிவில் இருந்தது. அதன் ஒருபுறம் ஏதோ தோலினால் கட்டப்பட்டிருந்தது.

''அது என்ன தோல்?'' என்று கேட்டான் ரஞ்சன்.

''மாட்டுத் தோல். பசு அல்லது எருது தோலாக இருக்கலாம்.''

துளிகள்

* தப்பாட்டம் என்பது மிகவும் தொன்மையான ஒரு நாட்டுப்புறக் கலையாகும்.
* தப்பு என்பது தமிழ்நாட்டில் மட்டுமல்ல கேரளாவிலும் பரவலாகப்

''எதுக்காக இந்தக் கருவியை நெருப்பிலே காண்பிக்கறாங்க?''

''அப்போதுதான் தோலிலே இருக்கிற ஈரப்பதம் வெளியேறி இறுகும். பிறகு தப்பை அடிக்கும்போது காதுக்கு இனிமையான ஒலி வரும்'' என்றார் சித்தப்பா.

ஆட்டக்காரர்களில் ஒருவர் நெருப்பில் காட்டியபடி அதைத் தட்டினார்.

சட்டென்று ரஞ்சனுக்கு நினைவு வந்தது. சென்னையில் அடுத்த வீட்டுக்காரரின் இறந்த உடலை ஊர்வலம் எடுத்துச் சென்றபோது, இந்த இசைக் கருவியை அடித்தபடி சென்றார்கள்.

ஒலிம்பிக் பிட்ஸ்...

❖ பழங்கால ஒலிம்பிக்ஸ் போட்டியைப் பார்க்கப் பெண்களுக்கு அனுமதியில்லை. போட்டி நடக்குமிடம் ஆண்களின் புனித இடமாக அறிவிக்கப் பட்டிருந்தது.

❖ 1900 ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டியில்தான் முதன் முறையாக 19 வீராங்கனைகள் பங்கேற்றனர்.



* சார்லட் கூப்பர்

❖ ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் சாம்பியன் பட்டம் பெற்ற முதல் பெண்மணி பிரிட்டன் நாட்டைச் சேர்ந்த 'சார்லட் கூப்பர்' (Charlotte cooper) ஆவார். இவர் தனி நபர் டென்னிஸ் விளையாட்டுப் போட்டியில் பட்டம் வென்றார்.



துளிகள்

பயன்படுத்தப்படுகிறது.

✱ செண்டை என்ற இசைக் கருவியின் ஒலிக்கும் தப்பு ஒலிக்கும் ஒற்றுமை உண்டு.

✱ தப்பு கருவியின் உடல் பலா மரத்திலிருந்து செய்யப்பட்டது.

சித்தப்பாவிடம் இதைச் சொன்னதும் அவர் முகத்தில் கொஞ்சம் வருத்தம் எட்டிப் பார்த்தது. "பொருளாதாரத்தில் தாழ்ந்து இருப்பவர்கள்தான் இந்தக் கலையில் பங்கெடுத்துக்கறாங்க. நகரங்களில் சவ ஊர்வலத்தில் மட்டும் இந்த நடனத்தை ஏற்பாடு செய்றாங்க. கிராமங்களிலே நல்ல விசேஷங்களுக்குக் கூட தப்பாட்டம் ஆடுவாங்க" என்றார்.

மெல்ல மெல்ல தப்பு ஒலியின் வேகம் கூடியது. அதற்கேற்ப ஆட்டமும் வேகம்பிடித்தது. சலங்கைகளின் ஒலியும் 'ஜிலிங் ஜிலிங்' என்று எழும்பியது.

'அட, நம்ம சினிமாக்களிலே குத்துப் பாட்டுன்னு சொல்வாங்களே, அந்த இசை கூட இந்த மாதிரிதானே வேகமாக இருக்கும்' என்று எண்ணினான் ரஞ்சன்.

மெல்ல மெல்ல தப்பு ஒலியின் வேகம் கூடியது. அதற்கேற்ப ஆட்டமும் வேகம் பிடித்தது. சலங்கைகளின் ஒலியும் 'ஜிலிங் ஜிலிங்' என்று எழும்பியது



சிறிது நேரத்தில் ஆட்டம் தொடங்கியது. ஆட்டக்காரர்கள் கிராமிய உடையுடன் காட்சி தந்தனர். அவர்கள் தலையில் வண்ணத் துண்டு அணிந்திருந்தனர். எதிர் எதிர் அணியாக ஆறு, எட்டுப் பேர் கையில் தப்புக் கருவியை வாசித்தபடி நடந்தார்கள். காலில் சலங்கை கட்டியிருந்தார்கள்.

தப்பு ஒலிக்கு நடுவே பார்வையாளர்கள் 'ஹோ'வென்று குரல் எழுப்பினர். இது ஆட்டக்காரர்களுக்கு மிகவும் உற்சாகம் கொடுக்க, அவர்கள் மேலும் வேகமாக ஆடத் தொடங்கினர்.

'எப்படித்தான் இவ்வளவு வேகமாக தப்புக் கருவியையும் அடிச்சிக்கிட்டு, ஆடவும் செய்யறாங்களோ!' என்று வியந்து போனான் ரஞ்சன்.

தந்திரக்கார கோபு!

கதை : ஜிங்கிள் பெல் கிரியேஷன்ஸ்
தமிழ் வடிவம் : மித்ரா




என் தலையில அடிச்சதுக்கே இப்படி கத்தறியே...
இப்போ, என் முறை. என் விரலால...
?!??!?
...முகத்துல குத்தறேன்!
கோபு சுத்தியலால் ஓங்கி அடித்தான்.
TIM!!!!!!
ஐயோ, பல் போச்சு.
விரலா இது?
ஆமா, மறுபடியும் குத்தறேன்...
எங்கே போறே?
ஐயோ! போதும்...
அரக்கன் ஓட்டம் பிடித்தான்.

டாக்டர் கு.கணேசன்

சபாஷ் ஜோஸப்!

ஹலோ, கோகுலம் குட்டீஸ்! நலம்தானே? உங்கள் உடலில் காயம் பட்டுவிட்டால், அதில் கிருமிகள் நுழைவதைத் தடுக்க, ஒரு மருந்துக் கட்டு போட்டுக் கொள்கிறீர்கள் அல்லவா? இதை முதன் முதலில் கண்டுபிடித்தவர் ஜோஸப் லிஸ்டர்.

இவர் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த அறுவை சிகிச்சை மருத்துவர். 1827ஆம் ஆண்டில் ஏப்ரல் 5ஆம் தேதி 'அப்டோன்' எனும் ஊரில் பிறந்தார். தமது பதினாறாவது வயதிலேயே 'ஒரு அறுவை சிகிச்சை நிபுணராகத்தான் வருவேன்' என்று கூறினார். அதன் படியே பள்ளிப் படிப்பிலும் கல்லூரிப் படிப்பிலும் படு புத்திசாலியாகத் திகழ்ந்தார்.

1852ல் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழகத்தில் மருத்துவப் பட்டம் பெற்றார். அந்நாளில் சிறந்த அறுவை சிகிச்சை நிபுணராகத் திகழ்ந்த 'ஜேம்ஸ் சைம்' என்பவரின் உதவியாளராகப் பணியைத் துவக்கினார். பின்பு லண்டனில் உள்ள 'எடின்பர்க் ராயல்' அரசாங்க மருத்துவமனையில் அறுவை சிகிச்சை மருத்துவராகப் பணியாற்றினார். அதன் பின்பு 1860-ல் 'கிளாஸ்கோ' அரசு மருத்துவ மனையில் அறுவை சிகிச்சைத் துறையில் பேராசிரியராக அமர்த்தப்பட்டார்.

''மனிதனுக்கு வரும் நோய்களை மருந்துகள் மூலம் மட்டுமல்லாமல் அறுவை சிகிச்சை செய்தும் குணமாக்கலாம்'' என்று மருத்துவர்கள் தெரிந்து வைத்திருந்த காலகட்டம் அது. அப்போதுதான் மயக்க மருந்தும் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

ஆகவே, இங்கிலாந்தில் உள்ள பல மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சைகள் பரவலாக நடந்தன. என்றாலும், அதில் ஒரு சோகமும் நிகழ்ந்து கொண்டிருந்தது. அறுவை சிகிச்சை செய்துகொண்ட பாதி நோயாளிகள் தொற்றுநோய்க்கு உள்ளாகி, சீழ் கோத்து, அது உடலெங்கும் புரையோடி, இறுதியில் மரணத்தைத் தழுவினர். இது லிஸ்டரின் மனதை உலுக்கியது.


நோயாளிகளின் மரணத்துக்கான காரணத்தை ஆராயத் தொடங்கினார். அறுவை சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் மருத்துவக் கருவிகள் மற்றும் மருத்துவரின் கைகளில் உள்ள மாசு, அறுவை சிகிச்சை செய்யும்போது, நோயாளியின் உடலுக்குள் பரவி, சீழ்ப் பிடிக்க வைத்து, மரணத்தின் வாசலுக்கு அழைத்துச் செல்கிறது என்று நினைத்தார்.



முதலில் காற்று மூலமாகத்தான் இந்த மாசு தொற்றுகிறது என்று முடிவு செய்



தார். காற்று அகற்றப்பட்ட அறையில் நோயாளியைக் கிடத்தி அறுவை சிகிச்சை செய்தார். சிகிச்சை முடிந்த பிறகுகூட காற்று புகாதவாறு காயங்களுக்குப் பல மடிப்பு களில் துணிக்கட்டு போட்டு மூடி வைத்தார். ஆனாலும் நோயாளிகள் பலர் புண் ஆறாமல் மடிந்தனர். அதனால் காற்று மூலம் வரும் மாசு மட்டுமே நோய்



பரப்புவதில்லை என்ற முடிவுக்கு வந்தார். வேறு என்ன இருக்க முடியும் என்று யோசனையில் ஆழ்ந்தார்.

அது 1965ஆம் ஆண்டு. பிரான்ஸ் நாட்டின் வேதியியல் அறிஞரான லூயி பாஸ்டர் ''நுண்கிருமிகள்'' பற்றி எழுதி யிருந்த ஒரு கட்டுரையை லிஸ்டர் படித்தார். நுண்ணுயிர்க் கிருமிகள்தான் தொற்றுநோய் ஏற்படுவதற்கு முக்கியக் காரணம் என்று பாஸ்டர் அதில் தெளி வாகச் சொல்லியிருந்தார்.

உடனே நோயாளி யின் புரையோடிய உடல் பகுதிகளை நுண் ணோக்கி வழியாக ஆராய்ந்தார். அவற்றில் நுண்கிருமி கள் இருப்பதைக் கண்ட தும், பாஸ்டர் கூறியது உண்மை என்று புரிந்தது. ''இந்தக் கிருமிகளைக் கொல்வ தற்கு கிருமிகள் உள்ள பகுதியை வெந்நீரில் மூக்க வேண்டும்'' என்று பாஸ்டர் ஆலோ சனை சொல்லி யிருந்தார். ஆனால், இந்த முறையினை நோயாளியிடம் நடைமுறைப் படுத்துவதில் உள்ள நடைமுறை சிரமத்தைத் தெரிந்துகொண்ட லிஸ்டர், அந்த கிருமிகளைக் கொல்வதற்கு ஒரு வேதிப் பொரு ளைக் கண்டு பிடிக்க ஆசைப் பட்டார்.

அப்போது ''ரூன்ஞ்'' (Runge) என்பவர் கண்டுபிடித்திருந்த ''கார்லிக் அமிலம்'' எனும் வேதிப்பொருள் சாக்கடை கழிவுகளை சுத்தப்படுத்து வதற்கு உதவுவதாகச் செய்தித்தாளில் படித்தார். உடனே அதை ஆராய்ச்சி செய்தார். இந்த வேதிப்பொருளுக்கு, பாக்டீரியா மற்றும் காளான் படைக் கிருமிகளைக் கொல்லும் குணம் உள்ளது என்று தெரிந்துகொண்டார்.

அடுத்தமுறை அவர் அறுவை சிகிச்சை செய்தபோது, அறுவை

சிகிச்சை அறை முழுவதையும் கார்பாலிக் அமிலத்தால் சுத்தப்படுத்தினார். பின்பு, நோயாளியின் உடல், தம்முடைய கைகள், உடனிருந்த பணியாளர்கள், *அறுவை சிகிச்சைக் கருவிகள் என்று எல்லாவற்றையும் கார்பாலிக் அமிலத்தில் தோய்த்தெடுத்த பிறகே சிகிச்சையை மேற்கொண்டார். அவர் எதிர்பார்த்தபடி அந்த நோயாளி தொற்றுநோய்க்கான எந்த அறிகுறியும் இல்லாமல் பிழைத்தார். ஆகவே, கார்பாலிக் அமிலம்தான் மனிதனுக்குப் பயன்படும் முதல் கிருமிநாசினி என்று லிஸ்டர் 1867-ல் மருத்துவ உலகுக்கு அறிவித்தார்.

அதன் பிறகு லிஸ்டர், காயங்களை மூடும் துணிகளில் கார்பாலிக் அமிலத்தைத் தோய்த்தெடுத்து, அதை மருந்து கட்டப் பயன்படுத்தலாம் என்பதையும் கண்டறிந்தார். லிஸ்டரின் இந்தப் புதிய அணுகுமுறை அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் பல நோயாளிகளின் உயிரைக் காப்பாற்ற உதவியது.

சரி, குட்டீஸ்! கார்பாலிக் அமிலத்துக்கு வேறு ஒரு பெயரும் உண்டு. அது என்ன தெரியுமா? யோசிச்சு வைங்க. அடுத்த மாதம் பார்ப்போம்!

மருத்துவ மேதைகள் :

கார்ல் அலெக்ஸாண்டர் நியூபெர்க்



''கார்ல் அலெக்ஸாண்டர் நியூபெர்க்'' (Carl Alexander Neuberg) என்பவர் ''உயிர் வேதியியலின் தந்தை'' (Father of Biochemistry) என்று உலகமெல்லாம் போற்றப்படும் 20ஆம் நூற்றாண்டு விஞ்ஞானி. இவர் 1877ஆம் ஆண்டு ஜூலை 29ஆம் நாள் ஜெர்மனியில் 'ஹனோவர்' எனும் ஊரில் பிறந்தார். இவர் பெர்லின் பல்கலைக்கழகத்தில் வேதியியலைப் படித்த பின்பு, நாம் சாப்பிடும் உணவுப் பொருட்களின் வேதிப்பண்புகளை ஆராய்ந்து வெளியிட்டார். குறிப்பாக கார்போஹைட்ரேட்டுகள், அமினோ அமிலங்கள், நொதிகள் (என்சைம்கள்) போன்றவற்றின் வேதிப்பண்புகளை விளக்கியதோடு மட்டுமல்லாமல் அவை எவ்வாறு நம் உடல் செல்களில் கரைந்து நமக்குப் பயன்தருகின்றன என்பதை முதன்முதலில் விளக்கியவர். 1910-ல் ''கார்பாக்ஸிலேஸ்'' எனும் புதிய நொதிப்பொருளைக் கண்டுபிடித்தார். சர்க்கரையை நொதிக்க வைத்து ''கிளிசரால்'' எனும் வேதிப் பொருளைப் பெற முடியும் என்றார். அதனை ஒரு வெடிபொருளாகவும் பயன்படுத்தலாம் என்று கண்டறிந்தார். அதைத் தொடர்ந்து, முதல் உலகப் போரின் போது ஜெர்மனி நாட்டின் படைகள் இந்த வெடிபொருளைப் பயன்படுத்தின. உலகப் புகழ்பெற்ற உயிர் வேதியியல் இதழின் (Febs Journal) ஆசிரியராகவும் இருந்தார். மருத்துவத்துறையில் அதுவரை இடம்பெறாதிருந்த உயிர்வேதியியல் துறையை இடம்பெறச் செய்தார். இவர் யூதர் இனக் கோட்பாடுகளைப் பரப்புவதில் தீவிரமாக ஈடுபட்டதால், 1937-ல் நாஜிக்களால் ஜெர்மனியை விட்டு விரட்டப்பட்டு, அமெரிக்காவில் தஞ்சமடைந்தார்.



கோகுலம்

எக்ஸ்பிரஸ்

உள்ளே...

அழகான
அகர வரிசைக் கதைகள்

- அதுதான் வாழ்க்கை - எஸ்.ஜூலியட் மரியலில்லி
- ஆசை... பேராசை - ம.சுந்தரலெட்சுமி
- இறைவன் இருக்கிறான் - தஸ்மிலா
- ஈகை நன்றே - ஆர்.மதிவதனா
- உயர்ந்த பரிசு - ஆ. விஜயலக்ஷ்மி
- ஊருக்கு வெளியே - சு.பெ.கீர்த்தனா
- எப்படி அடைப்பாய்? - வி.பிரகாஷ்
- ஏன் முடியாது? - பி.எஸ்.ஜேம்ஸ்
- ஐயாவின் கருணை - பழ.முருகப்பன்
- ஒரு ரகசியம் - ஆ.செல்வி
- ஓடுங்க... ஓடுங்க... - டி.மஹாலினி
- ஔடதம் தந்தேன் - பி.புலேந்திரன்











1900 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் கிரிக்கெட் இடம் பெற்றிருந்தது. இதில் பிரிட்டன் அணி தங்கம் வென்றது.

பச்சைக் கிளி!

பவழ நிறம் கிளிமூக்கு
பச்சை அதன் உடல்வண்ணம்
மழலை போல குரல்வளம்
மகிழ வைக்கும் நம் உள்ளம்!

உயரப் பறக்குது கிளிக் கூட்டம்
உரத்து ஒலிக்குது கிளியோசை
துயரம் என்றும் அதற்கில்லை
துடிப்பாய் பறக்குது கிளிக்கூட்டம்!

வீட்டில் கிளியை வளர்க்காதே
கூட்டில் அதையும் அடைக்காதே
காட்டில் வாழும் சுதந்திரத்தை
கூட்டில் அடைத்து தடுக்காதே!

– மு.சாய்பிரபு,
உறுப்பினர் எண்: 244,
தஞ்சாவூர்





கசடற கற்போம்!

கற்கப் பள்ளி போகிறேன்
கசடற பாடம் படிப்பேன்!
எண்ணும் எழுத்தும் அறிவேன்
இனிய தமிழில் பயில்வேன்!

பழுதில் லாமல் படிப்பேன்
பண்பில் உயர்ந்து நிற்பேன்!
நிதமும் கற்ற வழியில்
நடந்து காட்டி மகிழ்வேன்!

பள்ளிச் சீருடை அணிவித்து
படிக்க அனுப்பும் தாய்க்கு
கற்ற கலையைச் சொல்லி
கவலை போக்கி மகிழ்வேன்!

- கு.காளிமுத்து

பறவைகளே... பறவைகளே...

விரியும் சிறகை கைக ளாக்கி
விண்ணில் நீந்தும் பறவைகள்
உரிய காலம் வேடந் தாங்கல்
ஓடி வந்து சேர்ந்திடும்.

வெண்மை, சிவப்பு, கருமை வண்ண
விநோத மான பறவைகள்

ஒலிம்பிக் போட்டி கிரேக்க மொழியில் 'ஒலிம்பியாகோய் அகோனஸ்' (Olympiakoi Agones) எனப்படுகிறது.

ஒலிம்பிக் பிட்ஸ்...

ஐந்து சக்திகள்!

கொட்டி மழை கொடுக்கும்
கோள்கள் சுற்ற உதவும்
எட்ட நிற்கும் வானம்
என்றும் உதவி செய்யும்'

பள்ளம் தோண்டி மனிதர்
பழுதென செய்வார் துன்பம்
கள்ளம் இல்லா பூமி
காட்டும் பொறுமை அதிகம்!

அழுக்கைப் பொசுக்கிச் சாம்பல்
ஆக்கும் சக்தி நெருப்பும்
பழுது இல்லா பணிகள்
பலவும் செய்ய உதவும்!

ஓய்வு இன்றி உழைக்கும்
ஓடி யாடி அலையும்



தொய்வு இல்லா காற்றும்
தொண்டு என்றும் செய்யும்!

வனமும் மண்ணும் இங்கு
வளர என்றும் நன்கு
தனமாய் வந்தது நமக்கு
தடையிலா நீர் பெருக்கு!

- சென்னை. வெங்கட்ராமன்



பொழியும் அன்பின் மொழியை மட்டும்
புரிந்து வாழும் பறவைகள்

மென்மையான உண்மை அன்பில்
பேத மின்றி பழகிடும்

மொழிக ளுக்குள் சண்டை மூண்டு
மோதும் மனிதர் பூமியில்

கற்றுத் தேர்ந்து மற்ற நாட்டில்
தங்கும் போது தம்பி நீ
சற்றும் பேதம் அற்று நீயும்
ஒன்றாய் கூடி வாழ்ந்திடு!

- சி.விநாயகமூர்த்தி


ஒலிம்பிக் பிட்ஸ்...

கி.மு. 776 முதல் கி.பி. 393 வரை ஒலிம்பிக் போட்டிகள் கிரேக்கத்தில் நடைபெற்றன.

தெரிஞ்சுக்கங்க

வேட்டைக்காரன்!

'ஜிம் கார்பெட்' 1875ஆம் ஆண்டு நைனிடாலில் போஸ்ட் மாஸ்டராகப் பணியாற்றிய வில்லியம் கார்பெட்டின் மகனாகப் பிறந்தார். ஜிம் கார்பெட்டின் முழுப் பெயர் 'கர்னல் எட்வர்டு ஜேம்ஸ் கார்பெட்'. இவர் தம்முடைய வேட்டைத் திறமையால் அப்போதைய கவர்னர் ஜெனரல் லின்லித்தோ பிரபுவின் நட்புக்குப் பாத்திரமானார். ஆட்கொல்லி வேங்கைகளையும் சிறுத்தைகளையும் கொன்று, மக்களின் அபிமானத்தைப் பெற்றார்.







ஜிம் கார்பெட் வேட்டைக்காரராகவும், இயற்கையியலாளராகவும், புகைப்படக்காரராகவும் விளங்கினாலும், தம் வேட்டை அனுபவங்கள் சார்ந்து எழுதிய நூல்களால் நீங்காத புகழ் பெற்றார்.

'குமாவுன் புலிகள்' (Man Eaters of Kumaon) என்ற அவரது முதல் நூல் அதிகப் பிரதிகள் விற்றபோதிலும், கார்பெட்டுக்கு வாசகர்களிடையே ஒரு மரியாதையைப் பெற்றுத் தந்த நூல், 'எனது இந்தியா' (My India)தான்.

ஜிம் கார்பெட் ஆட்கொல்லிப் புலிகளை வேட்டையாடிய நைனிடாலைச் சுற்றியுள்ள காடுகள், இப்போது அவர் பெயராலேயே "ஜிம் கார்பெட் தேசிய வனவிலங்குப் பூங்கா" என்று அழைக்கப்படுகிறது.

இந்தியா விடுதலை பெற்ற சில மாதங்களில் பிரிட்டனின் மற்றொரு காலனி நாடான கென்யாவுக்குக் குடி பெயர்ந்த ஜிம் கார்பெட், 1955ஆம் ஆண்டு உயிர் துறந்தார்.

- சு.கு.ஜனனி

உறுப்பினர் எண் : 145,

ஏழாம் வகுப்பு,

பி.எஸ்.சிதம்பர நாடார் ஆங்கில மேல்நிலைப் பள்ளி,

விருதுநகர்

விடுகதைகள்

வாயில்லாத உண்டியல்!



I

1. அம்மா மடிமேல் ஆடுது குழந்தை - அது என்ன?
2. அறுந்தறுந்து விழும் கொடி; அழகு பூக்கள் பூக்காத கொடி - அது என்ன?
3. அறையறையாய் மண்டபம்; ஆள் தங்க முடியாத மண்டபம் - அது என்ன?
4. வாயில்லாத உண்டியலுக்குள்ளே வந்து குவிந்ததாம் பொற்காசுகள் - அது என்ன?

- ப. இனியன்,
உறுப்பினர் எண் : 35
சென்னை

II

1. மூச்சு உண்டு; உயிர் இல்லை
ஓட்டம் உண்டு; கால்கள் இல்லை
- அவன் யார்?
2. வெள்ளிக் காசு கொட்டிக் கிடக்குது;
அள்ளிக்கொள்ள ஆள் இல்லை
அது என்ன?
3. குடுமி உண்டு பூசாரி இல்லை;
கண்கள் உண்டு பார்வை இல்லை;
- அவன் யார்?
4. வளைந்திருக்கும் அம்பு இல்லை;
வண்ணமிருக்கும் ஓவியம் இல்லை;
- அது என்ன?

- மு.சாய்பிரசாத்,
உறுப்பினர் எண் : 243
தஞ்சாவூர்



விடைகள்

I. 1. அம்மிக்குழவி 2. மின்னல்
3. தேன்கூடு 4. மாதுளம் பழம்

II. 1. ரயில் வண்டி 2. நட்சத்திரம்
3. தேங்காய் 4. வானவில்




1964 ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில் ஆண்களுக்கான ஹாக்கி போட்டியில் இந்தியா ஏழாவது முறையாக தங்கம் வென்றது.




அ. சார்லஸ்,
ஆறாம் வகுப்பு, எஸ்.ஆர்.எஃப்.
வித்யாலயா மெட்ரிக்குலேஷன்
பள்ளி, மணலி





மு. சாய்பிரசாத்,
எட்டாம் வகுப்பு,
பொன்னையா ராமஜெயம்
பொதுப்பள்ளி,
தஞ்சாவூர்



ஜெ. அமர்நாத்,
பத்தாம் வகுப்பு,
காமராஜ் மேல்நிலைப்பள்ளி,
நம்பியூர்



உங்கள் கைவண்ணம்!

ஒலிம்பிக் பிட்ஸ்...

ஆசிய நாடுகளில் முதன் முறையாக 1964 ஆம் ஆண்டு ஜப்பானில் ஒலிம்பிக் போட்டி நடந்தது

ஆர். சசிகுமார்,
ஐந்தாம் வகுப்பு,
சிவபாக்கியம்
முத்துச்சாமி மெட்ரிக்
பள்ளி,
மாதேசம்பாளையம்







எஸ். டாலியா டிக்ஸி,
நான்காம் வகுப்பு,
விக்டரி மெட்ரிக்
மேல்நிலைப் பள்ளி,
மைலோடு



ரா. வைஷ்ணவி,
நான்காம் வகுப்பு,
அமிர்தா வித்யாலயம்,
செகந்திராபாத்



ஒலிம்பிக் பிட்ஸ்... 1984 ஒலிம்பிக்கில் டேபிள் டென்னிஸ் முதல் முறையாக அறிமுகமானது.





எங்கள் ஊர்

மாந்தோப்பும் மிட்சுபாவும்!

தமிழகத்தின் வட கோடியில் உள்ள ஊர்தான் எங்கள் ஊரான கும்மிடிப் பூண்டி. கும்மிடிப்பூண்டியில் தமிழர், தெலுங்கர் என இருமொழி பேசுவோரும் ஒற்றுமையாக வாழ்கின்றனர். வடமாநில மக்கள் இந்த ஊரிலுள்ள தொழிற்பேட்டையில் வேலை செய்கின் றனர்.

கும்மிடிப்பூண்டி சிப்காட் தொழிற் பேட்டையில் ஏராளமான தொழிற் சாலைகள் உள்ளன. இத்தொழிற்சாலை களால்தான் மக்களின் பொருளாதார வளர்ச்சியும் உள்ளன. எஸ்.ஆர்.எஃப், ஹைடெக் கார்பன், டி.வி.எஸ். சுந்தரம் பாஸனர்ஸ், மிட்சுபா போன்ற பெரிய தொழில் நிறுவனங்கள் இங்குள்ளன.

கும்மிடிப்பூண்டியிலிருந்து சென் னைக்கு அடிக்கடி புறநகர் ரயில் சேவை உண்டு. சமீ பத்தில் சென்னை மாநகரப் பேருந்து களும் இங்கு வந்துசெல்லத் தொடங்கி உள்ளன.

கும்மிடிப்பூண்டியைச் சுற்றிலும் விவ சாயம் நன்றாக நடக்கிறது. மாந்தோப்பு கள் அதிகம் உள்ளன. நாட்டின் இரு கண்களான விவசாயமும், தொழிற் சாலைகளும் சம அளவில் இவ்வூருக்குச் சிறப்பைத் தேடித்தருகின்றன.

வேகமாக வளர்ந்து வரும் கும் மிடிப்பூண்டி, எதிர்காலத்தில் பல சிறப்பு களைப் பெற்று விளங்கும் என்பதில் ஐயமில்லை.

(நீங்களும் இதுபோல் உங்கள் ஊர் குறித்த செய்தியை எழுதியனுப்புங்கள்)

- வே.தனசேகர்,
இரண்டாம் வகுப்பு,
கலைமகள் மெட்ரிக் பள்ளி,
கும்மிடிப்பூண்டி

பரிசுப் பெட்டி

ஒவ்வொன்றுக்கும் பரிசு தலா ரூ.25/-

''கம்பி மேல நடந்து காட்டறதாச் சொல்லி பந்தயம் கட்டின அந்த ஆள் என்னை ஏமாத்திட்டான்.''

''எப்படி?''

''கம்பியைக் கீழே போட்டுட்டு, அது மேலே நடந்து காட்டிட்டான்.''

- அ.சார்லஸ், ஆறாம் வகுப்பு
எஸ்.ஆர்.எஃப். வித்யாலயா
மெட்ரிக் பள்ளி,
மணலி

டாக்டர்: ''தம்பி, நீ தினமும் குறைந்தது ஆறு டம்ளர் தண்ணீர் குடிக்கணும்.''

சிறுவன்: ''டாக்டர், எங்க வீட்டுல மொத்தம் மூன்று டம்ளர் தான் இருக்கு!''

- எஸ்.சுப்ரியா,
எட்டாம் வகுப்பு,
ஆதர்ஷ் வித்யாலயா,
சென்னை

பாபு: ''சிவகாசிக்கும், நெய்வேலிக்கும் என்ன வித்தியாசம்?''

பாலு: ''சிவகாசியில காச கரியாக்குவாங்க, நெய்வேலியில கரிய காசாக்குவாங்க.''

- ந.பிருந்தா,
ஆறாம் வகுப்பு,
ராஜ் மெட்ரிகுலேஷன்
மேல்நிலைப் பள்ளி,
மயிலாடுதுறை

அப்பா: ''நேத்து ராத்திரி உன் ரூம்ல லைட்டே எரியலியே... ஆனா படிச்சேங்கறே?''

மகள்: ''படிக்கிற இன்ட்ரஸ்ட்ல அதையெல்லாம் கவனிக்கலை டாடி!''


- பா.தர்ஷிணி,
பன்னிரண்டாம் வகுப்பு
சி.சி.எம்.மேல்நிலைப் பள்ளி,
இடையன்குடி,



1992 ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில் பாட்மின்டன், பெண்கள் 'ஜுடோ' போட்டிகள் அறிமுகமாயின.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கோடக நல்லூர் ஊராட்சியைச் சேர்ந்த கிராமங்களின் முன்னேற்றத்துக்காக அமைக்கப்பட்டது 'யோக்' (YOKE - Youth of Kodaganallur Endeavour) மையம். இது இந்தக் கிராமத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர்களால் நடத்தப்படுகிறது. இந்த மையம் கடந்த மூன்று ஆண்டுகளாக கோடை விடு முறையில் எங்களைப் போன்ற கிராமத்துக் குழந் தைகளுக்கு முகாம் நடத்தி வருகிறது.

இந்த ஆண்டு மே மாதம் 24ஆம் தேதி




* கட்டபொம்மன் கோட்டை

சனிக்கிழமை முகாம் தொடங்கியது. நடுக்கல்லூர் கிராமத்திலிருந்து காலை வெயிலில் 1 கி.மீ நடந்து, கோடகநல்லூர் வந்த களைப்பை கனிவான முகங்களும் இனிமையான குரலும் இனிய வார்த்தைகளும் போக்கடித்தன. தமிழ்த்தாய் வாழ்த் துடன் முகாம் ஆரம்பமானது.

தினமும் காலையில் யோகா பயிற்சியுடன் முகாம் தொடங்கும். இது நல்ல உடற்பயிற்சியாக அமைந் தது. அறிவுபூர்வமான கதைகள் நம் இதிகா சப் புராணங்களி லிருந்து சொல்லக் கேட்டோம். நடை முறையில் மரியாதைகளைப் பற்றி விளக்கிய முனைவர் டாக்டர் சீனிவாசன் அடிப் படை ஆங்கிலம் கற்றுக் கொடுத்தார். இது எங் களுக்கு மிகவும் பயனுள்ள தாக அமைந்தது.

மறுநாள் காலையில் இரண்டு வேன்கள் மூலம் தூத்துக்குடிக்கு சுற்றுலா சென் றோம். முதலில் பாஞ் சாலங்குறிச்சி சென்றோம்.





* கட்டபொம்மன் சிலை

வீரபாண்டிய கட்டபொம் மன் கோட்டையிலுள்ள ஓவியங்களைக் கண்டு மகிழ்ந்தோம். கட்ட பொம்மன் சிலை, (ஐந்தரை அடி உயரம் 6 டன் எடை) ஒரே

பத்தாயிரம் மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் தங்கம் வென்ற முதல் தென்னாப்பிரிக்க வீராங்கனை 'டிராட்டு டுலு'.

குளிர்ச்சி தந்த கோடை முகாம்!

கல்லில் செய்யப்பட்டதாம்.

அதன் பின்னர் முத்துகள் உள்ள சிப்பிகள் வளர்க்கும் இடத்துக்குச் சென்றோம். இயற்கையான முத்துகள் என்றால் அந்த உயிரினங்களே தம் உடம்பில் தயாரிக்கின்றன.



* கட்டபொம்மன் நினைவிடம்





* தூத்துக்குடி துறைமுகம்

செயற்கையான முத்துகள் தயாரிக்க சிறிய வெள்ளை வர்ண பாசி குண்டு போல் உள்ள ஒரு பொருளை அந்த உயிரினங்களின் உள்ளே வைப்பார்கள். வண்ண முத்துகள் உள்ள சிப்பிகளானது அந்தமான் கடலில் மட்டும்தான் கிடைக்குமாம்.

இதைக்கண்டு களித்துவிட்டு நாங்கள் கப்பல் துறைமுகத்துக்குச் சென்றோம். கப்பல்கள் துறைமுகத்துக்குள் நுழையும் இடத்தையும் சென்று பார்த்தோம்.

கடைசி நாளன்றும் யோகா, கதை நேரம் முடிந்தபின், 'நவீன புதையலைத் தேடல்' என்ற விளையாட்டு விளையாடினோம். இதில் சுலபமாகக் கிடைக்கக்கூடிய பல்வகைப் பொருட்களைக் குறித்த நேரத்தில் சேகரித்து வர வேண்டும். சமூக பிரச்னைகளைக் குறித்து குறு நாடகங்கள் தயாரித்து நடித்தோம்.

கடைசியாக நிறைவு நிகழ்ச்சி நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக மேல்நிலைப் பள்ளி விளையாட்டு ஆசிரியர் திரு. லெட்சுமணன் அவர்கள் வந்திருந்தார். அனைவருக்கும் புத்தகங்களைப் பரிசாக வழங்கிப் பாராட்டினார்.

- என்.வெங்கட் நாராயணன்,
கோடகநல்லூர்

- என். பாஞ்சாலி, நடுக்கல்லூர்

ஒலிம்பிக் பிட்ஸ்...

1968 ஒலிம்பிக்கில்தான் வீரர்களுக்கு முதன் முதலில் ஊக்க மருந்து சோதனை நடத்தப்பட்டது.

நற்செயல்



துளசி இலை!

கோடை விடுமுறைக்கு தாத்தா, பாட்டி வீட்டுக்கு 'ஸ்ரீரங்கம்' சென்றிருந்தேன். தினசரி தாத்தாவுடன் அரங்கநாதர் கோயிலுக்குச் செல்வேன். அப்போது கோயிலில் கொடுக்கப்படும் துளசியை பலர் ஆங்காங்கே போட்டு விட்டு வருவதைப் பார்த்திருக்கிறேன். ஏதோ ஒரு இதழில் வெளியான செய்தியைப் படித்ததும், நான் அந்தத் துளசி இலைகளை ஓரிரண்டு வாயில் போட்டுக் கொண்டு, மீதியை ஒரு பாத்திரத்தில் போட்டு இரவு ஊறவைத்தேன். மறுநாள் காலை பல் துலக்கி முகத்தை அந்தத் துளசி நீரால் கழுவத் தொடங்கினேன். சருமத்தில் ஒரு பளபளப்பும் முகத்தில் ஒரு பொலிவும் கூடுவதைக் கவனித்தேன். நீங்களும் இதுப்போல் எதையும் வீணாக்காமல் பயன்படுத்துங்கள்.

- எஸ்.ஆர்.சங்கீதா,
பத்தாம் வகுப்பு, சக்தி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கனியாமூர்

"**நா**ன், எங்கள் தாத்தாவுக்காக மாதாந்திர மாத்திரை வாங்க அரசு மருத்துவமனைக்குச் செல்வேன். அப்போது வரிசையில் நின்று மருத்துவரிடம் காட்டுவது, மருந்துகளைப் பெறுவது, சீட்டு வாங்குவது போன்ற இடங்களில் நான் வரிசையில் நின்றபடி மற்றவர்களை ஒழுங்குபடுத்துவேன். அதே நேரம் முடியாதவர்களுக்கு அவர்கள் தேவை அறிந்து உதவுவது என்று என்னால் இயன்றதைச் செய்வேன். மேலும் மருத்துவமனையில் ஊழியர்கள் குறைந்துவிட்டதால் தேவையெனில் அவர்களுக்கும் உதவுவேன். இது எனக்கு மன நிறைவை அளிக்கிறது.

- த.பரதன்,
திருவாரூர்



மன நிறைவு!

1976 பெண்களுக்கான கூடைப்பந்து போட்டி முதன்முறையாக சேர்க்கப்பட்டது.

ஒலிம்பிக் பிட்ஸ்...

வித்தியாசங்களைக் கண்டுபிடி!




இரண்டு படங்களுக்கிடையே உள்ள ஐந்து வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்! விடை 56-ம் பக்கம்.





சர்வதேச ஒலிம்பிக் குழு பிரெஞ்ச் அறிஞர் 'பியரி பிரடி பேரன் தே கூபர்டின்' அவர்களால் தொடங்கப்பட்டது.





புதிர்கள்

எப்படிப் பிரிப்பது?

கடிகாரத்திலுள்ள 12 எண்களை மூன்று கூறுகளாகப் பிரிக்க வேண்டும். ஒவ்வொரு பிரிவிலும் உள்ள எண்களின் கூட்டுத்தொகை சமமாக இருக்க வேண்டும். எப்படிப் பிரிக்கலாம்?

– ஜி.ப்ரணவ்,
விழுப்புரம்

எத்தனை? எத்தனை?

ஒரு குளத்தில் சில மலர்கள் இருந்தன. அவற்றின் மீது சில வண்டுகள் பறந்து வந்து அமர்ந்தன. பூவுக்கு இரண்டு வண்டுகள் உட்கார்ந்தால் இரண்டு பூக்கள் மிச்சமாகும். பூவுக்கு ஒரு வண்டு உட்கார்ந்தால் ஒரு வண்டு மிச்சமாகும். அப்படி என்றால் மொத்தம் எத்தனை பூக்கள்? எத்தனை வண்டுகள்?

– ஜி.ப்ரணவ்,
விழுப்புரம்



வயது என்ன?

ஒருவருக்கு மூன்று பிள்ளைகள். ஒவ்வொரு பிள்ளையும் மூன்று வருட இடைவெளியில் பிறந்தவர்கள். மூன்று பேருடைய மொத்த வயது 24 என்றால் கடைசிப் பையனுடைய வயது என்ன?

– பு.இந்துமதி,
12-ம் வகுப்பு,
எஸ்.எஸ்.கே.வி.
மேல்நிலைப் பள்ளி,
காஞ்சிபுரம்



ஒலிம்பிக் பிட்ஸ்...

1900 - ஒலிம்பிக்கில் இந்தியாவின் 'நார்மன் பிரிட்சோர்டு' தடகளத்தில் 2 வெள்ளிப் பதக்கங்களை வென்றார்.

எண் விளையாட்டு!



அ. 21978 x 4 = 87912 - இதிலுள்ள சிறப்புத் தன்மை என்ன?

ஆ. இரண்டு இலக்க எண் அல்லது அதற்கு மேற்பட்ட இலக்கமுள்ள எண் எடுத்துக் கொள்ளவும். அதைத் தலைகீழாக எழுதி முதல் எண்களோடு கழித்தால் விடை 9ன் மடங்காக வரவேண்டும். முடியுமா?

- பி.சர்வேஸ்வரன்,
மதுரை

வாழ்க்கை கணக்கு!

X = < ÷ + > -

வாழ்க்கையில் நாம் கடைப்பிடிக்க வேண்டிய சில வாக்கியங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றுக்கு இடையே உள்ள வட்டங்களில், மேலே கொடுக்கப்பட்டிருக்கும் கணிதக் குறியீடுகளைப் பொருத்தமாக இட்டால் இந்தப் புதிர் முழுமை பெறும். எங்கே முயற்சி செய்யுங்கள் பார்க்கலாம்!

1. நல்ல செயல்களைக் ◯ கொள்
2. தீயவற்றை ◯ கொள்
3. அறிவைப் ◯ கொள்
4. நேரத்தை ◯ கொள்
5. இன்ப துன்பங்களை ◯ ஆக்கிக் கொள்
6. அன்பை ◯ ஆணவத்தைக் ◯ கொள்



- அ.அனீஸ் ஃபாத்திமா,
பதினொராம் வகுப்பு,
சிசம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி,
போடிநாயக்கனூர்

விடைகள் : பக்கம் 56



இரண்டு ஒலிம்பிக் போட்டிகளுக்கு இடையிலான காலத்தை கிரேக்கர்கள் 'ஒலிம்பியாட்' என்பர்.

அகர வரிசை



எஸ்.ஜூலியட் மரியலில்லி

...ங் கதைகள்

அதுதான் வாழ்க்கை!

அந்த மல்லிகைப்பூ நீண்ட நேரமாக காத்திருந்து கடவுளைப் பார்த்தது.

''என்ன விஷயம்?'' என்று கேட்டார்.

''கடவுளே... என்னுடைய வாழ்நாளை நீட்டிக்க வேண்டும். நான் மொட்டாக அரும்பி பூவாக மலர்ந்த அரை நாளுக்கெல்லாம் வாடி வதங்கி விடுகிறேன். இந்த அற்ப வாழ்வும் ஒரு வாழ்வா? எனக்கு வெறுத்துவிட்டது...'' என்று அழுதது மல்லிகைப்பூ.

''மல்லிகையே, நீ மிகவும் மென்மையானவள், வாசனையானவள்... உன்னுடைய இயல்புக்குத் தக்கபடிதான் வாழ்நாள் இருக்கிறது''என்றார். மல்லிகைப்பூ அழுதுகொண்டேயிருந்தது.

''சரி என்னோடு வா...'' - அழைத்துக் கொண்டு புறப்பட்டார் கடவுள். ஒரு கல்யாண மண்டபத்தில் பெண்களெல்லாம் மல்லிகை சூடி கலகலப்பாய்ப் பாடிக் கொண்டிருந்தார்கள். மணமேடை மல்லிகையால் மணமணத்தது. மணப்பெண் மல்லிகை அலங்காரத்தில் ஜொலி ஜொலித்தாள்.

''இங்கே பார்... உன்னால் எல்லோருக்கும் எவ்வளவு சந்தோஷம்...''

மல்லிகைப்பூ 'உம்'மென்று இருந்தது. ஒரு துக்க வீட்டுக்கு அழைத்துச் சென்றார் கடவுள். அங்கு இறுதி ஊர்வலத்துக்கு மல்லிகைகளால் அலங்கரித்துக்கொண்டிருந்தார்கள்.

''ஒரு வாழ்வின் இறுதிக்கும் நீ முக்கியமானவளாய் இருக்கிறாயே இதில் உனக்கு கௌரவம் இல்லையா...''

மல்லிகைப்பூ பேசவில்லை.

ஆலயத்தின் உள்ளே போனார்கள். இறைவனுக்கு மல்லிகை மாலையைச் சூடி ஆராதனை செய்தனர்.

''பாரேன்... இந்த உலகத்தைப் படைத்த கடவுளுக்கும் மல்லிகையைச் சூடி நன்றி செலுத்துகிறார்கள். இதை விட வேறென்ன வேண்டும்?''

மல்லிகைப்பூ சமாதானமாகவில்லை.

''எப்படியிருந்தால் என்ன... எல்லாம் அரை நாளுக்குள்தானே'' என்றது.

அப்போது ஒரு எருக்கம் பூ கடவுள் முன் வந்தது. ''கடவுளே... திடமான கட்டமைப்பு, அழுத்தமான நிறம், இருந்தும் என்ன பிரயோஜனம்? கொஞ்ச நேரம் வாழ்ந்தாலும் மற்றவர்களுக்கு உதவும் இந்த மல்லிகைப்பூ மாதிரி ஜென்மம் வேண்டும்... அதுதான் வாழ்க்கை'' என்றது.

கடவுள் மல்லிகைப்பூவைத் திரும்பிப் பார்த்தார். மல்லிகைப்பூ வெட்கத்தில் தலைகுனிந்து நின்றது. ●



2012 ஆம் ஆண்டு ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி இலண்டனில் நடைபெறவுள்ளது.



ஆசை... பேராசை!

ராஜன் ஒரு விறகு வெட்டி. அதில் வருகிற வருமானம் குடும்பத்துக்குப் போதவில்லை. தன் ஊருக்கு ஒரு முனிவர் வந்திருப்பதை அறிந்து அவரிடம் சென்று தன் வறுமை நிலையை கூறினான்.

முனிவர், ''காட்டின் நடுவில் மகிழ மரத்தின் கீழே புதையல் உள்ளது. அதில் பாதியை எடுத்துக் கொண்டு, மீதியை அங்கேயே புதைத்து விட்டு வா'' என்றார்.

ராஜன் காட்டுக்குள் சென்று மரத்தைக் கண்டுபிடித்து, அதன் கீழ் தோண்டிய போது புதையல் இருந்தது. 'ஏன் பாதியை எடுக்க வேண்டும்? முழுவதும் எடுத்துக்கொள்வோம். முனிவரிடம் போய் பாதியைத்தான் எடுத்துக் கொண்டேன் என்று சொல்லி விடுவோம்' என முடிவு செய்தான்.

முழுவதையும் எடுத்துக்கொண்டு புறப்பட்டான். வழியில் சில திருடர்கள் வந்தனர். ராஜனை அடித்து புதையல் பானையை எடுத்துக் கொண்டு ஓடி விட்டார்கள்.

ராஜன் முனிவரிடம் சென்று, ''திருடர்கள் பணத்தைப் பிடுங்கிச் சென்று விட்டார்கள்'' என்றான்.

முனிவரோ புன்னகையுடன் ''போகட்டும், புதையலின் மீதிப் பாதியை எடுத்துக்கொள்'' என்றார்.

ராஜனோ பதில் சொல்ல முடியாமல் நின்றான். ●

ம.சுந்தரலெட்சுமி

இறைவன் இருக்கிறான்!

தஸ்மிலா

ஒரு தோட்டத்தில் பச்சைப் பசேலென்று மரங்களும், செடி கொடிகளும் அடர்ந்து வளர்ந்திருந்தன. அங்கே ஒரு தென்னை மரமும் ஒரு வாழை மரமும் அருகருகே வளர்ந்து வந்தன.

ஒரு நாள் தென்னை, ''ஏய் வாழை! உன்னைவிட நானே உயரம். அதனால, நானே பெரியவன்'' என்றது.

உடனே வாழை, ''நெட்டையா இருந்தா போதுமா? நீ ஒட்டடைக் குச்சி மாதிரி உடம்பெல்லாம் காஞ்சி கிடக்குறே. என்னைப் பாரு, தலையிலிருந்து வேர் வரை தளதளன்னு இருக்கேன்'' என்று பெருமையடித்தது.

''நான் வேரால குடிக்கிற நீரை இளநீரா மனிதர்களுக்குக் கொடுக்கறேன். உன்னால முடியுமா?''

''ஏய்! என்னோட தண்டை அரைச்சு ஜூஸ் குடிப்பாங்க தெரியுமா?''

ஆத்திரத்தில் தென்னை மரம் ஒரு இளநீரை உதிர்த்து வாழைமரத்தின் மேல் போட்டது. ''எங்கிட்டே தேங்காய் இருக்கே!'' என்று கூறியது.

''என்னோட வாழைப் பழத்தை 'வைட்டமின்களின் கிடங்கு' என்றே சொல்லலாம்.''

தென்னை மரம் தன் இலைகளை அசைத்து நடனமாடிக்கொண்டே, ''என் அழகிய இலைகள் குடிசைபோட உதவும்'' என்றது.

''என்னோட இலையில்தான் மனிதர்கள் சாப்பிடுவாங்க. விசேஷ நாட்கள்ல வாசலில் எனக்குத்தான் முதல் மரியாதை'' என்றது வாழை மரம்.

அப்போது புயல் காற்றுடன் பேய் மழை பெய்தது. வெள்ளமும், சூறைக் காற்றும் சேர்ந்து எல்லா மரங்களையும் சாய்த்தது.

குற்றுயிரும், குலையுயிருமாய்க் கிடந்த தென்னை ''நீயா, நானான்னு சண்டை போட்டோம். நம்மை எல்லாம் படைத்த இறைவனை மறந்துட்டோம். அவன்தான் பெரியவன்'' என்று உணர்ந்து சொன்னது.





முதல் இளையோர் ஒலிம்பிக் போட்டி 2010 ஆம் ஆண்டு சிங்கப்பூரில் நடைபெறவுள்ளது.

ஈகை நன்றே!

ஆர்.மதிவதனா

சுமித்ராவுக்கு பத்து வயது. அவள் இருப்பது ஒரு குக்கிராமம். தொடக்கப் பள்ளிகூட அடுத்த ஊரில்தான் உள்ளது. நீண்ட தூரம் நடந்து பள்ளியை அடைவாள். அவளுக்கு சைக்கிள் வாங்கி, அதில் போக வேண்டுமென நீண்ட நாட்களாகவே ஆசை. ஆனால், சுமித்ராவின் அப்பா கூலி விவசாயி. வருகிற வருமானம் சாப்பிடவே போதவில்லை. சைக்கிள் எங்கே வாங்குவது?

ஒரு நாள் வழக்கம்போல் தனது தோழியுடன் பள்ளிக்குச் சென்றுகொண்டிருந்தாள். அன்று பரீட்சை வேறு. அப்போது ஒரு நாயின் தீனமான குரல் கேட்டது. 'அந்தக் குரல் எங்கிருந்து வருகிறது' என்று சுற்றும் முற்றும் பார்த்தாள். சற்றுத் தொலைவில் பிடியில்லாத ஒரு கிணறு. அங்கிருந்துதான் வந்தது.

சுமித்ரா தோழியுடன் வேகமாகச் சென்று பார்த்தாள். கிணற்றுக்குள் ஒரு படியில் அந்த வெள்ளை நிற நாய் இருந்தது. அது உயர்வகை நாய். பணக்கார வீடுகளில் வளர்க்கப்படும் நாய்.

''இது எப்படி இங்கே வந்தது? பாவம், தவறி விழுந்து உடம்பெல்லாம் அடிபட்டிருக்கு. வா செல்வி, நாயைக் காப்பாற்றலாம்'' என்றாள் சுமித்ரா.

''என்ன விளையாடறியா? நமக்கு பரீட்சைக்கு நேரமாச்சு. தவிர, இது பாழடைந்த கிணறு. படிக்கட்டுகளும் சரியில்லை. நாயைக் காப்பாற்றப் போய் நாமே விழுந்தால் என்ன ஆவது? நாய்தானே... போனால் போகட்டும்'' என்றாள் செல்வி.

''மனிதனாக இருந்தாலும் நாயாக இருந்தாலும் அதுவும் உயிர்தானே. ஓர் உயிர் ஆபத்தில் இருக்கறப்ப பார்த்துட்டு சும்மா போறது பாவம். நீ இங்கேயே இரு'' என்ற சுமித்ரா, புத்தகப் பையை செல்வியிடம் தந்தாள்.

பிறகு, கிணற்றுக்குள் கவனமாக இறங்கி, நாயைத் தூக்கிக்கொண்டு மேலே வந்தாள். அப்போது அந்தச் சாலையில் ஒரு கார் வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய மனிதர் வேகமாக வந்தார்.

''ஜில்லி, நீ இங்கேதான் இருக்கியா? உன்னை எங்கெல்லாம் தேடினோம்'' என்றபடியே கைகளை நீட்ட, அந்த நாய் செல்லமாக குரைத்தபடி அவரிடம் தாவியது.


''ஏங்க, இது உங்க நாயா?'' என்று கேட்டாள் செல்வி.

''ஆமாம்! நான் பக்கத்து ஊரில் இருக்கிறேன். நேற்று இரவு ஜில்லி எப்படியோ வீட்டிலிருந்து வெளியே வந்துவிட்டது. என் ஜில்லியைக் காப்பாத்தினதுக்கு நன்றி'' என்றவர், அவர்களை பற்றி விசாரித்தார்.

சுமித்ராவும் செல்வியும் தங்களைப் பற்றி சொன்னார்கள்.

''நாய்தானே என்று அலட்சியப்படுத்தாமல் காப்பாற்றிய உங்கள் ஈகை குணத்தை நினைச்சு சந்தோஷப்படறேன். உங்களுக்கு ஏதாவது செய்ய நினைக்கிறேன். உங்கள் முகவரியைச் சொல்லுங்கள்'' என்றார்.

அவரே, இருவரையும்



பள்ளியில் விட்டுவிட்டுச் சென்றார். மாலை வீடு திரும்பிய சுமித்ராவுக்கும் செல்விக்கும் இன்ப அதிர்ச்சி! இருவரின் வீட்டு வாசலிலும் புத்தம் புதிய சைக்கிள்கள்.

''ஒரு பெரியவர் காரில் வந்தார். காலையில் நடந்த விஷயத்தைச் சொன்னார். நாயைக் காப்பாற்றியதுக்குப் பரிசாக இதைக் கொடுத்தார்'' என்றார் சுமித்ராவின் அப்பா.

இருவருக்கும் மகிழ்ச்சி! சைக்கிளில் ஏறி சிட்டாகப் பறந்தார்கள். ●



அக்காலத்தில் ஒலிம்பியா நகருக்குச் செல்வது புனிதப் பயணமாக கருதப்பட்டது.

உயர்ந்த பரிசு!

ஆ.விஜயலக்ஷ்மி

"**நா**ளை நடக்கும் பேச்சுப் போட்டிக்கு என்ன தலைப்புடா?" என்று கேட்டான் சண்முகம். "ஆங்... திக்... திக்... திக்கு வாயுடன் பே... பேச்சுப் போட்டியில் கலந்துகொள்வது எப்படி? இதுதாண்டா தலைப்பு" என்று கிண்டலாகச் சொன்னான் ரகுநாதன்.

சண்முகத்துக்கு லேசான திக்குவாய். ரகுநாதன் அவன் வகுப்பில் படிப்பவன். சுற்றுவட்டாரத்தில் எங்கு பேச்சுப் போட்டி நடந்தாலும் பள்ளி சார்பில் ரகுநாதன் கலந்துகொள்வான். முதல் பரிசையும் வென்று வருவான். ஆனால், அவனிடம் 'தான்' என்ற ஆணவமும் மற்றவரை மட்டந்தட்டும் குணமும் அதிகம்.

அடுத்த நாள் காலை. உள்ளூர் பள்ளி மாணவ, மாணவிகள் கலந்து கொண்ட பேச்சுப் போட்டி. தலைப்பு : **'தண்ணீர் சிக்கனத்தில் மாணவர்களின் பங்கு'**. ரகுவே முதல் பரிசுக்குத் தேர்வானான்.

மாலையில் பரிசளிப்பு விழா. சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட பிரபல எழுத்தாளர் கோதண்டம் பரிசுகளை வழங்கினார்.

பிறகு, "விழாவில் கலந்துகொள்ள நான் மதியமே பள்ளிக்கு வந்து விட்டேன். அப்போது பள்ளிக் குடிநீர்க் குழாயில் தண்ணீர் வீணாக வழிந்து கொண்டிருந்தது. அவ்வழியே சென்ற யாருமே குழாயை மூடவில்லை. நான் மூட சென்றபோது, அங்கு வந்த வேறொரு மாணவன் குழாயை மூடினார். எனக்கு மகிழ்ச்சி. அவரை அழைத்துப் பேசினேன். அந்த மாணவர் பெயர் சண்முகம். அவரை மேடைக்கு அழைக்கிறேன்" என்றார். சண்முகம் மேடைக்கு வந்தான்.

"இங்கே வாங்க தம்பி!" என்று அழைத்த கோதண்டம், அவனுக்கு கைகொடுத்தார். "இந்த மாணவர் போட்டியில் பங்கேற்கவில்லை. ஆனாலும், இவரது செயலைப் பாராட்டி சிறப்பு பரிசை அளிக்கிறேன்" என்று கூறி வழங்கினார்.

அனைவரின் கரவொலியில் பள்ளியே அதிர்ந்தது. தனது செயலுக்குக் கிடைத்த அந்த உயர்ந்த பரிசை நினைத்து ஆனந்தக் கண்ணீர் சிந்தினான் சண்முகம். ●



ஒலிம்பிக் ஆலிவ் இலை நம்பிக்கை மற்றும் அமைதியின் அடையாளமாகக் கருதப்படுகிறது

ஒலிம்பிக் பிட்ஸ்...



ஊருக்கு வெளியே...

ஊருக்கு வெளியே ஆற்றை ஒட்டிய இடத்தில் எலி, ஆமை, மான், காகம் என நான்கு நண்பர்கள் ஒற்றுமையாக இருந்தன.

அவை நாள்தோறும் ஓர் இடத்தில் சந்திப்பது வழக்கம். அன்று எலி, ஆமை, காகம் மூன்றும் வந்து சேர்ந்தன. ஏனோ, மான் வரவில்லை.

எலி, ''காக்கையண்ணா! நீ காடு முழுவதும் பறந்து சென்று மான் எங்கே இருக்கிறது என்று பார்த்துவா'' என்றது.

காகமும் 'சரி' என்று பறந்து சென்றது. அங்கு மான் ஒரு வேடன் விரித்த வலையில் மாட்டிகொண்டிருந்தது.

அதைக் கண்ட காகம், ''நண்பா! நீ தைரியமாக இரு! நாங்கள் வந்து உன்னை ஆபத்திலிருந்து மீட்கிறோம்'' என்று சொல்லிச் சென்றது.

காகம், நண்பர்கள் இருக்கும் இடத்தை அடைந்து, மானின் அபாய நிலையைக் கூறியது. எலிக்கு ஓர் யோசனை! நண்பர்களிடம் கூறியது. அந்த யோசனை சரியாகப்படவே, நண்பர்கள் அதன்படி நடக்கத் தீர்மானித்தார்கள்.


காகம் எலியைத் தன் முதுகில் சுமந்து கொண்டு மான் இருக்கும் இடத்தை அடைந்தது. எலி, மான் இருந்த வலையைத் தன் கூறிய பற்களால் கடித்து மானை விடுவித்தது.

அப்போது அங்கு வேடன் வந்தான். உடனே, காகம் மரத்தின்மேல் சென்று அமர்ந்தது. எலி, அருகிலிருந்த வலைக்குள் பதுங்கியது. மான் ஒரு புதருக்குள் ஒளிந்தது. ஆமை அருகிலிருந்த குளத்தில் மறைந்தது. வேடன் ஏமாந்து சென்றான்.

'ஒருவருக்கொருவர் உதவி செய்து ஒற்றுமையாய் இருந்தால் எத்தகைய ஆபத்திலிருந்தும் தப்பிக்கலாம்' என்று நான்கும் சந்தோஷமாக பாடியவாறு சென்றன.

சு.பெ.கீர்த்தனா

1896 ஒலிம்பிக்கில் 15 நாடுகளைச் சேர்ந்த 245 விளையாட்டு வீரர்கள் பங்கேற்றனர்.



எப்படி அடைப்பாய்?

ஓர் ஊரில் மணி என்பவன் இருந்தான். அவன் ஓரிடத்தில் வேலை செய்து வந்தான். மாதம் தவறாமல் அவனுக்கு நிலையான ஊதியம் வந்தது. எவ்வளவு பணம் வந்தாலும் உடனே செலவு செய்துவிடுவான். தனக்குத் தெரிந்தவர்களிடம் எல்லாம் கடன் வாங்கியும் செலவு செய்தான். அதைத் திருப்பித் தரவும் முடியவில்லை. கடன் கொடுத்தவர்கள் அவனிடம் பணம் கேட்டுத் தொல்லை தந்தனர்.

தன் நண்பன் சோமுவிடம் சென்று, ''கடன்காரர்களின் தொல்லை தாங்க முடியவில்லை. இந்தச் சூழலில் நீ பணம் கடன் தந்தால், நான் அவர்கள் கடனை அடைத்துவிடுவேன்'' என்றான்.

''என்னிடம் வாங்கும் கடனை எப்படி அடைப்பாய்?'' என்று கேட்பான் சோமு.

''எனக்குக் கிடைக்கும் ஊதியத்தில் சிறுகச் சிறுகச் சேமித்து அடைப்பேன்'' என்றான் மணி.

''அது உன்னால் முடியாது'' என்றான் சோமு.

''ஏன் முடியாது?'' என்று கேட்டான் மணி.

''உனக்கு சேமிக்கும் பழக்கமே இல்லையே. அப்படி இருந்திருந்தால் இப்படி கடனாளியாகி கையேந்த மாட்டாயே. உன்னைவிட எனக்கு வருமானம் குறைவு. ஆனாலும் சேமித்து வைக்கிறேன். அது எப்போதாவது ஆபத்தில் உதவும். அதனை ஊதாரியான உனக்குக் கொடுத்து இழக்க விருப்பமில்லை'' என்றான்.

மணிக்கு அவமானமாகிவிட்டது. வருத்தத்துடன் திரும்பி நடக்க முயற்சித்தபோது சோமு ஆறுதலாய் தோளில் கைபோட்டான்.

''என்ன நண்பா, பயந்துவிட்டாயா? சேமிப்பின் அவசியத்தை நீ உணரவே அப்படிச் சொன்னேன். பணம் தருகிறேன். கடன்களை அடை. இனியாவது சிக்கனமாக இரு'' என்றான்.

மணி மகிழ்ச்சியுடன் சோமுவை அணைத்துக்கொண்டான்.

வி.பிரகாஷ்

ஏன் முடியாது?

பி.எஸ்.ஜேம்ஸ்

ஒரு பாம்புப் பிடாரன், தான் வைத்திருந்த பாம்புக் கூடையோடு காட்டு வழியே போய்க் கொண்டிருந்தான். கூடையில் ஒரு நல்ல பாம்பு இருந்தது. பிடாரன் அருகில் இருந்த கிணற்றில் குளிக்க விரும்பினான்.

அதுவரை பாம்புக் கூடையை யார் பொறுப்பிலாவது கொடுக்க எண்ணினான். ஏனென்றால் மேலே ஒரு கழுகு வட்டமிட்டபடி இருந்தது.

அப்போது ஒரு நரி அங்கே வந்தது.

''நரியே! எனக்கு ஒரு உதவி செய். இந்தக் கூடையில் நல்ல பாம்பு இருக்கிறது'' என்று திறந்து காட்டினான்.

சுருண்டு படுத்திருந்த பாம்பைப் பார்த்ததும் நரிக்குக் கிலி பிடித்துக்கொண்டது. இருந்தாலும் வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

''பாம்பைப் பார்த்துக் கொள். நான் குளித்து விட்டு வருகிறேன்'' என்றான் பிடாரன்.

''அய்யா, நீங்கள் போனபின் பாம்பு கூடையை விட்டு வெளியே வந்து ஓடினால், என்னால் பிடிக்க முடியாது. ஏனென்றால் காலில் முள்குத்திய புண் உள்ளது'' என்று சாக்கு சொன்னது நரி.

''இது பரம சாது. வெளியே வராது. தவிர, பல்லு பிடுங்கின பாம்பு'' என்றான் பாம்புப் பிடாரன்.

உடனே நரி ''சீ! சீ! இந்தப் பாம்புக்குக் காவல் இருக்க என்னால் முடியாது?'' என்றது.

''ஏன்?'' என்று கேட்டான்.

''உங்க பாம்பு கூடைய விட்டு வெளியே வராதுன்னு சொல்றீங்க. அப்ப அது படு சோம்பேறின்னு தெரியுது. பல்லு பிடுங்கின பாம்புங்கறதால, வீரமே இருக்காது. ஒரு கோழையைக் காவல் காக்க என் தன்மானம் இடம் கொடுக்கவில்லை'' என்று சொல்லிவிட்டு நரி அங்கிருந்து சென்றது.

பிடாரன் திகைத்து நின்றான்.





ஐந்து வெவ்வேறு நிறங்களுடைய வளையங்களைக் கொண்ட ஒலிம்பிக் கொடி 1914 ஆம் ஆண்டு அறிமுகமானது.

ஐயாவின் கருணை!





ஒரு சமயம் அன்னியத் தூதரகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி காமராசரைப் பார்க்க வந்தார். புதுமையான, சிறப்புமிக்க, வானொலிப் பெட்டி ஒன்றை பரிசாகத் தந்தார்.

சில நாட்கள் வானொலியைக் கேட்ட காமராசர், வெளியூர்ப் பயணங்களிலும், உள்ளூர் வேலைகளிலும் ஈடுபட்டதால் பல மாதங்கள் அதனைப் பயன்படுத்தவில்லை. வானொலிப் பெட்டி ஒரு மூலையில் கிடந்தது. பின்னர் ஒருநாள் அதனைப் பயன்படுத்த எண்ணி வெளியே எடுத்தார்.

வானொலிப் பெட்டியின் பின்புறம் திறந்து கிடந்ததால் ஒரு குருவி, கூடு கட்டியிருந்தது. கூட்டுக்குள் சின்னஞ் சிறு குருவிக் குஞ்சுகள் வாயைப் பிளந்து 'கீச்! கீச்' எனச் சப்தமிட்டன.

''என்னப்பா... இவ்வளவு மறைவான இடத்தில் இருக்கும் ரேடியோவுக்குள் குருவி எப்படி வந்தது?'' என்று வியந்தார் காமராசர்.

நண்பர் ஒருவர் குருவிக் குஞ்சுகளை அப்புறப்படுத்த எண்ணினார். உடனே காமராசர், ''வேண்டாம்! வேண்டாம்! இப்ப ஒன்னும் அவசரமில்லை. இதை வெளியே வைக்கச் சொல்லுங்கள். குஞ்சுகள் வளர்ந்து சென்ற பிறகு வானொலிப் பெட்டியைப் பழுது பார்த்து உபயோகிக்கலாம்'' என்றார்.

காமராசரின் கட்டளைப்படியே அந்த வானொலிப் பெட்டி இரண்டு நாட்கள் வெளியே இருந்தது. அவர் எதிர்பார்த்த படியே குருவி, கூட்டைக் காலி செய்து சென்றது.

குருவியிடம் கூட பரிவு காட்டிய அருள் உள்ளம் கொண்ட தலைவராகத் திகழ்ந்தார் காமராசர். ●



பழ.முருகப்பன்

ஒலிம்பிக் பிட்ஸ்...

இந்தியாவின் 'கஷ்பா ஜாதவ்' 1952 ஆம் ஆண்டு மல்யுத்தப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றார்.

ஒரு ரகசியம்!

ஒரு அடர்ந்த காட்டில் பல உயிரினங்கள் வாழ்ந்தன. அவை தம்மை ஆள ஒரு ராஜாவைத் தேடின.

ஒரு நாள், ஒரு குரங்கு காட்டுக்குள் வந்தது. மரத்துக்கு மரம் தாவி வித்தை காட்டி ஆடியது.

மற்ற மிருகங்கள் மகிழ்ந்தன. ''இவரே நம் ராஜா'' என்றது யானை. பிற மிருகங்களும் அதை ஒத்துக்கொண்டன. அதனால் குரங்கு ராஜா பதவியை ஏற்றது.

தினமும் மிருகங்கள் அதற்குப் பழங்கள் கொண்டு வரும். அந்தக் குரங்கு சாப்பிட்டுச் சாப்பிட்டுத் தூங்கும்.

ஒரு நரிக்கு புது ராஜாவைப் பிடிக்கவில்லை. 'வெறும் வித்தை காட்டியதற்கு ராஜாவாக்கி விட்டார்களே! இவனால் ஆபத்துதான்' என்று நினைத்தது.

'என்ன செய்யலாம்?' என யோசித்தவாறு நடக்கையில், வேடன் ஒருவன் வலை விரித்திருப்பதைப் பார்த்தது. உடனே அதற்கு ஒரு யோசனை தோன்றியது.

குரங்கு ராஜாவிடம் சென்று, ''உங்களுக்கு ஒரு ரகசியம் சொல்ல வேண்டும். நான் சொல்வதைப் போல் செய்தால் அடுத்த காட்டுக்கும் ராஜாவாகலாம். என்னோடு வாருங்கள்'' என்றது நரி.

நரியுடன் குரங்கு சென்றது. வேடனின் வலையில் சாமர்த்தியமாக மாட்ட வைத்தது நரி.

''ஏய்! என்னை இப்படி வலையில் சிக்க வைத்துவிட்டாயே. போகட்டும்! ஏதோ ரகசியம் சொல்வதாகச் சொன்னாயே அது என்ன?'' என்று அப்பாவியாகக் கேட்டது குரங்கு.

''ஒரு முட்டாள் ராஜாவாக இருக்கக் கூடாது. இதுதான் ரகசியம்'' என்றவாறு நரி வேகமாகச் சென்றது. ●

ஆ.செல்வி



மாவீரன் ஹெராக்கிளஸ் என்பவர்தான் ஒலிம்பிக் ஸ்டேடியத்தை தமது தந்தையார் சீயஸ் நினைவாகக் கட்டினார்



ஓடுங்க... ஓடுங்க...

அது ஒரு பெரிய காடு. அங்கே பெரிய பெரிய மரங்களில் பலவித பட்சிகள் இருந்தன. வானத்தில் பறவைகள் 'கீக்கி... கூக்கூ... ஊஊ...' என்று பலவிதமாகக் கத்திக்கொண்டு பறப்பதைப் பார்த்தது ஒரு குட்டி முயல்.

தனது தாயிடம், ''அம்மா எனக்கும் இந்தப் பறவைகளைப்போல பறக்க ஆசையாக இருக்கிறது'' என்றது.

''நமக்கு அந்தச் சக்தி கிடையாது. கடவுள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான திறமைகளைக் கொடுத்துள்ளார். அடுத்தவரின் திறமையைப் பார்த்து ஏங்குவதை விட்டு நமது திறமையை நினைத்து சந்தோஷப்பட வேண்டும்'' என்றது தாய் முயல்.

தாயின் பதில் குட்டிக்கு மகிழ்ச்சி தரவில்லை. சோர்வுடன் மரத்தடியில் படுத்தது. அப்போது ''ஓடுங்க... ஓடுங்க'' என்று கத்தியபடி நிறைய மிருகங்கள் ஓடிவந்தன.

''என்ன ஆச்சு?'' என்று கேட்டது தாய் முயல்.

''காட்டுத் தீ பரவிக்கிட்டிருக்கு எல்லோரும் ஓடுங்க'' என்றது சிங்கம்.

குட்டி முயலும் தனது தாயோடு சேர்ந்து ஓடியது. அப்போது ஒரு கவலை. ''அம்மா, மரத்திலுள்ள பறவைக் குஞ்சுகள் எல்லாம் என்ன செய்யும்?'' என்று கேட்டது.

''திரும்பிப் பார்'' என்றது தாய்.

குட்டி திரும்பிப் பார்த்தது. யானை, ஒட்டகச்சிவிங்கி போன்ற பெரிய மிருகங்கள் பறவைக் குஞ்சுகளைக் காப்பாற்றி, தங்கள் தோளில் சுமந்தவாறு ஓடி வந்துகொண்டிருந்தன.

''பார்த்தாயா! வேகமாக ஓடும் திறமை பெற்றிருந்ததால் யாருடைய உதவியும் இல்லாமல் தப்பித்தோம். பறக்க முடியவில்லை என்று ஏங்கினாயே'' என்றது தாய்.

குட்டி முயல், ''புரிந்தது அம்மா! இனி இல்லாததை நினைத்து ஏங்க மாட்டேன். இருப்பதைக் கொண்டு பிறருக்கு உதவுவேன்'' என்றது. ●

டி.மஹாலினி

1896 ஆம் ஆண்டு ஏப்ரல் 6-15 வரை ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. ஒலிம்பிக் பிட்ஸ்...

ஔடதம் தந்தேன்!

பி.புலேந்திரன்

''ஆறுமுகம்! நேத்திலேருந்து போயிலெ இல்லாமெ என்னமோ போல இருக்குடா. ஒரே ஓட்டமா போய் வாங்கி வாடா'' என்றார் தாத்தா.

''சரி, தாத்தா'' என்று சொல்லிவிட்டு கிளம்பினான் ஆறுமுகம்.

மலையடிவாரத்தில் இருந்த அந்தச் சிறிய கிராமத்தில் அங்கொன்றும், இங்கொன்றுமாக சுமார் ஐம்பது குடும்பங்கள் இருக்கலாம். கடைகள் எதுவும் கிடையாது. வெற்றிலை, பாக்கு வாங்குவதென்றால் கூட மூன்று கல் தொலைவில் உள்ள பெரிய கிராமத்துக்குதான் போக வேண்டும்.

புகையிலைப் பொட்டலத்தை வாங்கி சட்டைப் பைக்குள் வைத்துக் கொண்டு திரும்பி நடந்தான்.

அப்போது - ''ஓ...ங்...ங்...'' என்று பிளிறிக்கொண்டே ஓடி வந்தது, ஒரு காட்டு யானை. அதைப் பார்த்த ஆறுமுகம், ஓடினான். பின்னாலே வந்த யானை நின்று விட்டது. திரும்பிப் பார்த்தான் ஆறுமுகம்.

அந்த யானை நடக்க முடியாமல் கீழே விழுந்தது. ஆறுமுகம் தைரியம் பெற்று அருகில் சென்று பார்த்தான். யானையின் காலில் இரத்தத்தை உறிஞ்சும் அட்டை!





இந்தியாவின் 'இராஜ்யவர்த்தன் சிங் ரத்தோர்' 2004 ஆம் ஆண்டு துப்பாக்கிச் சுடும் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

அட்டையானது இரத்தத்தை உறிஞ்சி, உப்பிக்கொண்டேபோகும். அதற்குள் அதை இழுத்து எறிந்து விட வேண்டும். இல்லையெனில் ஆபத்து.

'என்ன செய்யலாம்?' என்று சிந்தித்த ஆறுமுகத்துக்கு, அட்டையைப் பற்றி தாத்தா சொன்னது நினைவுக்கு வந்தது.

சட்டைப் பைக்குள் இருந்த புகையிலைப் பொட்டலத்தை எடுத்துப் பிரித்து, சிறிது புகையிலையை எடுத்து வாயில் போட்டு மென்று, அப்படியே கையில் எடுத்தான். யானையின் காலில் இருந்த அட்டையின் மேல் சாறு படும்படியாக வைத்தான்.

அடுத்த நொடி 'பொத்'தென்று கீழே விழுந்து விட்டது அந்த அட்டை.

யானை, ஆறுமுகத்தை நன்றிப் பெருக்குடன் பார்த்துவிட்டு காட்டுக்குள் ஓடி மறைந்தது. ஆறுமுகம் உற்சாகத்துடன் வீடு திரும்பி, தாத்தாவிடம் புகையிலையைக் கொடுத்தான்.

''என்னடா, பாதிதான் இருக்கு'' என்று கேட்டார் தாத்தா.

''மீதி புகையிலை, யானையைக் காப்பாற்ற ஔடதமா (மருந்தா) பயன் பட்டது. முன்பு, ஒருமுறை நீங்க சொன்ன யோசனைதான் இது'' என்று கூறி நடந்ததைச் சொன்னான்.

''சபாஷ்! தைரியமாவும் புத்தி சாலித்தனமாகவும் செய்தே'' என்ற தாத்தா, ஆறுமுகத்தை அணைத்துக் கொண்டார். ●

விடையைச் சொல்; பரிசை வெல் 12-ல் கலந்துகொண்டவர்களில் பெரும்பாலானோர் சரியான விடைகளை எழுதியிருந்தார்கள். ஆகவே, பரிசுத் தொகையான ஆயிரம் ரூபாயை குலுக்கல் மூலம் பத்து பேருக்கு தலா ரூ.100/- வீதம் வழங்குகிறோம்!

சரியான விடைகள்:

1. கொல்லிமலை 2.கலிங்கா சமூக அறிவியல் பயிற்சி நிலையம்

3. ட்ராண்டுலா 4. 300 டன்கள், 5.33

பரிசு பெறுவோர்:

1. என். இராமச்சந்திரன் - விழுப்புரம்
2. த.சுகன்யா விருதுநகர்
3. செ.தெய்வமணி - அருப்புக்கோட்டை
4. வி.சரவணகுமார் - பெங்களூர்
5. எம்.அனிஸா பேகம் - கோபிசெட்டிபாளையம்
6. பா.ராஜபாண்டி - திருப்பரங்குன்றம்
7. ரா.புனிதா - பூவாளூர்,
8. எஸ்.அருண்குமார் - ஆரணி
9. ஜெ.ஜெசிகா - திருநெல்வேலி
10. கே.பால சரவணன் - பழனி



பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்; கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி!

ஒலிம்பிக் பிட்ஸ்...

1900 - ஒலிம்பிக்கில் பிரான்ஸ் 25 தங்கம், 36 வெள்ளி, 31 வெண்கலத்துடன் முதலிடம் பிடித்தது.

கைக்கு வேலை

இங்குள்ள படத்தை உங்கள் கைவண்ணத்தால் அழகுபடுத்துங்க குட்டீஸ்!



வண்ணம் தீட்டுங்கள்!

ஒலிம்பிக் பிளாஷ்...

1896 - ஒலிம்பிக் போட்டியின் முதல் சாம்பியன் அமெரிக்காவின் டிரிபிள் ஜம்ப் வீரர் 'ஜேம்ஸ் கனோலி'

விடைகள் பக்கம்!

எப்படிப் பிரிப்பது?

பிரிவு 1: 1,2,11,12
பிரிவு 2: 3,4,9,10
பிரிவு 3: 5,6,7,8
ஒவ்வொரு கூறின் கூட்டுத்தொகை 26.

எத்தனை? எத்தனை?

5 பூக்கள், 6 வண்டுகள்

வயது என்ன?: 5 வயது

என் விளையாட்டு!

அ) 4 ஆல் பெருக்கும் போது, எண்ணின் இலக்கங்கள் தலைகீழாக (வலமிருந்து இடமாக) அப்படியே வருகின்றன.

ஆ) 98-89 = 9
957-759 = 198 = 1+9+8
= 18 = 1+8=9

வாழ்க்கை கணக்கு

1. நல்ல செயல்களைக் (+) (கூட்டிக்) கொள்
2. தீயவற்றை (−) (கழித்துக்)கொள்
3. அறிவைப் (×) (பெருக்கிக்) கொள்
4. நேரத்தை (÷) (வகுத்துக்) கொள்
5. இன்ப துன்பங்களை (=) (சமமாக்கிக்) கொள்
6. அன்பை (<) (அதிகமாக்கி) ஆணவத்தைக் (>) (குறைத்துக்) கொள்



வித்தியாசங்கள்:

1. நாயின் வால்
2. தொப்பி நிறம்
3. புழுக்கள்
4. தேனீக்கள் எண்ணிக்கை
5. பறவைகள் எண்ணிக்கை

அன்பு நண்பர்களே...

'கோகுலம் எக்ஸ்பிரஸ்' பகுதிக்கு கதை, கவிதை, அறிவியல் துணுக்குகள், புதிர்கள், சுற்றுலா அனுபவம், பள்ளி மற்றும் வீட்டில் நடந்த பல்சுவை அனுபவங்களை எழுதியனுப்புங்கள். படைப்புகளுடன் உங்கள் பெயர், வகுப்பு, பள்ளி, வீட்டு முகவரியைத் தெளிவாக குறிப்பிட வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர் - கோகுலம்
(எக்ஸ்பிரஸ் பகுதி)
47-NP., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032

படைப்புகளை அனுப்புங்கள்; பங்கேற்று அசத்துங்கள்!



பெயர் : ....

முகவரி : ....

....

....


....

ஒரு வருட சந்தா ரூ. 96/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். உள்ளூர் காசோலைகள் மட்டுமே ஏற்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்,) கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032

'பரிதி' இரா.வேங்கடேசன்



குளிர்க் கண்ணாடி!

அருணன் என்றொரு சிறுதம்பி
ஆறாம் வகுப்பில் படிக்கின்றான்
அருளும் அறிவும் மிகவுண்டு
அருமை நண்பர் பலருண்டு

துடியாய் எதையும் செய்கின்ற
சூரப் பிள்ளை! அவன் கொண்ட
பிடிவாதம் ஒரு பெரிய குறை
பிடித்தால் உடும்புப் பிடியேதான்

கோடைக் கூச்சம் குறைக்கின்ற
குளிர்ச்சி தரும் கண்ணாடியினை
அடுத்த வீட்டு மணிபாலன்
அணிந்து செல்வதைக் கண்டானே!

தனக்கும் அதுபோல்
வேண்டுமெனத்
தந்தையின் முன்னே
ஆர்ப்பரித்துப்
பணத்தின் அருமை கருதாமல்
பகட்டாய் வாங்கி
அணிந்திட்டான்

அடுத்த நாளே அருணனவன்
அனைவரும் காண வேண்டுமென
'விடுவிடு' வென ஒரு சைக்கிளினை
மிதித்த படியே வலம் வந்தான்.

எதிரில் வந்த இலக்கியன்மேல்
இடித்து மோதி விழுந்திட்டான்
''மதியில் லாத மடப்பயலே
மதியப் பொழுதே குருடா நீ?''



கதைப் பாடல்

இப்படிக் கடுமொழி கூறியபடி
இடித்த இலக்கியனைக் கண்ணுற்றான்
அப்போ(து) அவனிரு விழிகண்டே
அருணன் உள்ளம் துணுக்குற்றான்

ஒலிம்பிக் பிட்ஸ்...

❖ 2000 ஆம் ஆண்டு சிட்னியில் நடைபெற்ற ஒலிம்பிக்ஸ் போட்டியை 16,000 ஒளிபரப்பு நிறுவனங்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் இணைந்து சுமார் 3.8 பில்லியன் தொலைக்காட்சிப் பார்வையாளர்களுக்குக் கொண்டு சேர்த்தனர்.

❖ 2004ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக்ஸ் போட்டியில் சுமார் 11,100 போட்டியாளர்கள் 202 நாடுகளிலிருந்து பங்கேற்றனர்.



''என்ன தம்பி உன்பார்வை
இப்படி உள்ளது'' எனக் கேட்டே
கண்ணில் வடியும் கண்ணீரைக்
கையால் அருணன் துடைத்துவிட்டான்!

ஒய்வில் லாமல் சின்னத்திரை
உட்கார்ந்தென்றும் பார்த்தேனா?
பார்வை குறைந்தது! வெய்யிலினைப்
பார்க்கக் கண்கள் பயப்படுது!''


பளிச்சென அருணன் இலக்கியனின்
பார்வைக் கூச்சம் போக்கிடவே
குளிர்ச்சி தரும் தன் கண்ணாடி
கொடுத்து அணிய உதவினன்!

''எங்கே 'கூலிங் கிளாஸ்'' என்றே
இடிந்து கேட்ட தாயிடம்
''பொங்கும் என் பிடிவாதமுடன்
போயிற் றது''வெனப் புன்னகைத்தான்!

தும்பி

ஆழி


தும்பி என்பது பூச்சி இனத்தில் ஈ வகையைச் சேர்ந்தது. இதை தட்டாம் பூச்சி என்றும் சொல்வார்கள். தும்பிகளில் நூற்றுக்கு மேற்பட்ட வகைகள் இருக்கின்றன. சிறு ஊசி அளவிலிருந்து 15 செ.மீ. நீளம் வரை சிவப்பு, பச்சை, நீலம், மஞ்சள், கறுப்பு என பல நிறங்களில் உள்ளன. நீர் ஓடைகள், குளம்குட்டைகள், ஆறுகள், சதுப்பு நிலங்கள் ஆகியவற்றின் அருகில் உலகமெங்கும் இவை வாழ்கின்றன.





தும்பியை ஆங்கிலத்தில் 'டிராகன் ஃப்ளை' என்பார்கள். 'டிராகன்' என்பது சீனாவில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்தே புராணக் கதைகளில் சொல்லப்பட்டு வருகிற, இறக்கைகளுடனும், 6 கால்களுடனும், நீண்ட வாலுடனும், நெருப்பு மூச்சு விடுகிற ஒரு பயங்கரப் பிராணி.

தும்பிகள், தாவரங்களுக்கோ மனிதர்களுக்கோ எந்தத் தீங்கும் செய்வதில்லை. மனிதர்களுக்குத் தீங்கு செய்யும் கொசுக்களையும் பூச்சிகளையும் அவை தின்று அழிக்கின்றன.





தும்பிக்கு ஒளி ஊடுருவக்கூடிய இரண்டு ஜோடி இறக்கைகள் இருக்கின்றன. பெரிய வாயும், கூர்மையான தாடைகளும் இருக்கின்றன. வலிமையான ஆறு கால்கள் உள்ளன. கால்கள் நடப்பதற்குப் பயன்படுவதில்லை. ஓர் இடத்தில் இருந்து பற்றிக் கொள்வதற்குப் பயன்படுகின்றன. கால்களால், தன்னைவிட பல மடங்கு கனமான பொருள்களையும் இது தூக்கிக்கொண்டு பறக்கும்!



தும்பிக்கு இரண்டு பெரிய 'கூட்டுக் கண்கள்' உள்ளன. ஒவ்வொரு கூட்டுக் கண்ணும் 20,000 விழி லென்சுகளைக் கொண்டது! அதனால் இதற்குப் பார்க்கும் சக்தி அதிகம். இது தன் தலையைத் திருப்பாமலே எல்லா திசைகளிலும் — மேலும் கீழும், முன்னும் பின்னும் — பார்க்கும். அது மட்டுமல்ல, இது தன் தலையை ஒரு முழுச் சுற்றாக 180 பாகை வரை — திருப்பக் கூடியது!




இதற்கு இரண்டு சிறிய உணர் கொம்புகள் உள்ளன. அவை வாசனையை நுகர்வதற்கும், தொட்டு உணர்வதற்கும், ஒலியைக் கேட்பதற்கும், திசைகளை அறிவதற்கும் உதவுகின்றன.



தும்பிகள் நீரிலும், நீர் நிலைகளில் வளர்ந்துள்ள தாவரங்களின் மீதும் முட்டைகள் இடுகின்றன. முட்டைகள் பொரிந்ததும் குஞ்சுகள் நீரில் வாழத் தொடங்குகின்றன.

குஞ்சுப் பருவத்தில் அவற்றுக்கு இறக்கைகள் இருப்பதில்லை. குஞ்சுகள் ஏராளமான பூச்சிகளின், அல்லது கொசுக்களின் கூட்டுப் புழுக்களைத் தின்று வளர்கின்றன. இவை உடலில் உள்ள செவுள்கள் மூலம் சுவாசிக்கின்றன. அந்த நிலையில் குஞ்சுகள், நீரில் வாழும் எந்த உயிரினங்களையும் விட வேகமாக நீந்தக் கூடியவை!





இந்தப் பூச்சி, தும்பியாக மாறுவதற்கு முன், நீரிலிருந்து வெளியேறி, ஒரு தாவரத்தின் தண்டைக் கால்களால் பற்றிக்கொண்டு தொங்குகிறது. இந்தப் பருவத்திலிருந்து இது வளர்ச்சி பெற்றதும் இதன் மேல்தோல் உரிந்து விடுகிறது.

முழு வளர்ச்சி பெற இந்தப் பூச்சி 12 தடவைகள் தோல் உரிக்க வேண்டியிருக்கிறது. கடைசியாகத் தோலைக் கிழித்துக்கொண்டு தும்பியாக வெளி வருகிறது!






தும்பி, பறப்பதற்கு முன், சூரிய வெப்பத்தில் தன் உடலைக் கதகதப்பாக்கிக் கொள்கிறது. இறக்கை களைப் பல தடவை அசைத்துத் தயார்ப்படுத்திக் கொள்கிறது. பறக்கும்போது இறக்கைகளை நிமிடத்திற்கு 1000 தடவைகள் அசைக்கிறது! தும்பி நன்றாகப் பறக்கும். அது பறக்கும் வேகம் மணிக்கு 100 கி.மீ. அது மேலும் கீழுமாகப் பறக்கும். சட்டென்று திரும்பிப் பறக்கும். முன்னால் பறக்கும். பின்னாலேயும் பறக்கும். தலைகீழாகவும் பறக்கும். வானத்தில் அசைவற்று அப்படியே அந்தரத்தில் நிற்கும். ஒரு ஹெலிகாப்டர் செய்யும் சாகசங்களைவிடப் பல விதங்களில் இது பறக்கும்.




'தட்டாம்பூச்சி தாழப் பறந்தால் மழை வரும்' என்று கிராமங் களில் சொல்வார்கள். வானத்தில் வீசும் குளிர்ந்த காற்றின் காரண மாக இவை தரையை நோக்கித் தாழ்ந்து கூட்டம் கூட்டமாகப் பறந்து கொண்டிருக்கும். இது மழை வருவதன் அறிகுறி!

தும்பிக்கு எதிரிகள் பறவைகளும் தவளைகளும். அவை தும்பியை இரையாக்கிக் கொள்கின்றன. ஆனால், தும்பி முட்டையிட்டுக் கொண்டு அமர்ந்திருக்கும் சமயத்தில்தான் அவற்றால் பிடிக்க முடியும்!





ஆஸ்திரேலியாவிலும் ஆசியாவிலும் உள்ள 'ஆர்ச்சர்' என்னும் 'வில்லாளி மீன்' தும்பிக்கு எதிரி. நீர்த்தாவரங்களில் தும்பி அமர்ந்து முட்டையிட்டுக் கொண்டிருக்கும் போது அந்த மீன் தன் வாய் நிறைய நீரை உறிஞ்சி வைத்துக் கொண்டு அதன் மேல் எதிர்பாராமல் பலமாகப் பீச்சியடித்து அதை வீழ்த்தித் தின்னும்!



ஓர் அதிசயம்: தும்பியின் புழுக்குஞ்சுகள், அவை வளர்கிற வரையில், குஞ்சுகளாகவே சேற்றில் மூன்று ஆண்டுகள் வாழ்கின்றன. ஆனால், அவை தும்பிகளாக ஆனதும் வாழ்வது மூன்று மாதங்களே!

பத்து லட்சம் ஆண்டுகளுக்கு முன்பும் தும்பிகள் வாழ்ந்திருக்கின்றன. அப்போது அவை ஒரு கழுகின் அளவுக்கு இருந்தன! டைனோசர் காலத்திற்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த தும்பிகளின் 'பாசில்கள்' என்னும் பாறைப் படிவங்கள் இப்போது கிடைத்திருக்கின்றன!



தெரியுமா?

500 ஆண்டுகள்... 2,20,000,00 டாலர்!



'நிகோலஸ் கோபர்னிகஸ்' சிறந்த வானவியல் அறிஞர். இவர் 1543-ல் வெளியிட்ட புரட்சிகரமான வானியல் கொள்கை பற்றிய நூல் பிரதி ஒன்று அண்மையில் இரண்டு கோடியே இருபது லட்சம் டாலருக்கு அமெரிக்காவில் ஏலம் போய் இருக்கிறது! இந்த நூலைப் பற்றிய சில சுவையான செய்திகள்...

சூரியனும் சந்திரனும்தான் பூமியைச் சுற்றி வருகின்றன என்ற மத அடிப்படையிலான அறிஞர் தாலமியின் கொள்கையைத் தூக்கிப் போட்டுவிட்டு, சூரியன்தான் பிரபஞ்ச மையம் என்று பிரகடனம் செய்தார் கோபர்னிகஸ். இதுதான் விண்வெளி அறிவியலைப் பற்றிய முக்கியமான கொள்கையாக அமைந்தது. ஆனால் மதவாதிகள், கோபர்னிகஸ் கொள்கையைக் கடுமையாக எதிர்த்தார்கள். கோபர்னிகஸின் கொள்கையை ஆதரித்ததற்காக, பின்னால் வந்த கலீலியோவுக்கு ரோம் நாட்டுத் திருச்சபை தண்டனை விதிக்தது. வீட்டுக் காவலிலேயே அவர் இறந்தும் போனார்.

கோபர்னிகஸ் எழுதி வெளியிட்ட அந்த நூலின் தலைப்பு **வானக் கோளங்களின் சுழற்சி நிலை**. இந்த நூலை அவர் 1533ஆம் ஆண்டிலேயே எழுதி முடித்துவிட்டார். திருச்சபைகளின் எதிர்ப்புக்கு அஞ்சி நூலை வெளியிடாமல் வைத்திருந்தார். ஆனால், கோபர்னிகஸ் இப்படி ஒரு நூலை எழுதி வைத்திருப்பதை அறிந்த அவருடைய நண்பர்கள், அதை வெளியிடத் தூண்டிக் கொண்டேயிருந்தார்கள்.

ஜெர்மானியக் கணித மேதையான 'ஜார்ஜ் ரேட்டிகஸ்' என்பவர் கோபர்னிகஸைச் சந்தித்து, அந்த நூலை வெளியிட்டே ஆக வேண்டும் என்றார்.

கோபர்னிகஸ், நூலை வெளியிட இசைந்ததோடு, புத்திசாலித்தனமாக, அதை மூன்றாம் போப் பால் அவர்களுக்குச் சமர்ப்பணமும் செய்துவிட்டார்! ரேட்டி கஸ்ஸே, நூல் பிரதியை 'நூரம்பர்க்' நகருக்கு எடுத்துப் போய் அச்சிட ஏற்பாடு செய்தார். ஆனால், அங்கே மார்டின் லூதரின் எதிர்ப்பு கிளம்பியது. எனவே, 'லெயிப்ஸிக்' நகரத்தில் இருந்த ஆண்ட்ரியாஸ் ஓஸியாண்டகிடம் நூலை அச்சிடக் கொடுத்தார் ரேட்டிகஸ்.

1543ஆம் ஆண்டில் நூல் வெளியானபோது, கோபர்னிகஸ் உடல் நலம் மிகவும் சீர்கெட்டுப் படுக்கையில் இருந்தார். அச்சான தம்முடைய நூல் பிரதி கையில் கிடைக்கும் வரையே கோபர்னிகஸ் உயிரோடிருந்தாராம்.

அந்த நூல் பிரதிதான், ஐந்நூறு ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது ஏலம் போயிருக்கிறது!

• **சுப்ர.பாலன்** •

கோகுலம் சிறுவர் சங்கம்

பட்டியல்

'கோகுலம் சிறுவர் சங்கம்' பட்டியல் இந்த மாதமும் தொடர்கிறது. இவர்களின் புகைப்படங்கள் இரண்டாவது, மூன்றாவது அட்டைகளில்!



601) ச.சாம்பவி, ஒன்பதாம் வகுப்பு, தமிழ் மகளிர் மகாவித்தியாலயம், பதுளை, இலங்கை
602) ச.யாதவராம், பத்தாம் வகுப்பு, ஊவா விஞ்ஞான கல்லூரி, பதுளை, இலங்கை
603) சீ.கலைச்செல்வன், எட்டாம் வகுப்பு, வளவனார் மேல் நிலைப் பள்ளி, திருச்சி
604) பி.ஷெரின் பால், ஏழாம் வகுப்பு, எல்.எம்.எஸ். மகளிர் மேல்நிலைப் பள்ளி, நெய்யூர்
605) கோ.கமலக்கண்ணன், ஐந்தாம் வகுப்பு, டைமண்ட்ரேஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சேலம்
606) ஜெ.கவுசல்யா, நான்காம் வகுப்பு, மேரி இமாகுலேட் துவக்கப் பள்ளி, திருப்பத்தூர்
607) ச.சிவபிரகாசம், பத்தாம் வகுப்பு, விவேகானந்தா பாலமந்திர் மெட்ரிக் பள்ளி, ஆட்டையாம்பட்டி.
608) க.ராஜேஷ்குமார், பன்னிரண்டாம் வகுப்பு, வித்யா விகாஸ் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, திருச்செங்கோடு
609) க.சித்ரா, ஏழாம் வகுப்பு, ஏ.என்.எம்.நடுநிலைப் பள்ளி, அ.குப்பம்
610) க.கோபால், ஐந்தாம் வகுப்பு, ஏ.என்.எம்.நடுநிலைப் பள்ளி, அ.குப்பம்
611) ச.சாதிக் பாட்ஷா, ஒன்பதாம் வகுப்பு, வேலுவுடையார் மேல்நிலைப் பள்ளி, திருவாரூர்
612) க.விஜயசாந்தி, பத்தாம் வகுப்பு, ஆ.ம.அ.ம.மேல்நிலைப் பள்ளி, அ.குப்பம்
613) ரா.பாஸ்கர், பதினொராம் வகுப்பு, அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி
614) உ.மதன்ராஜ், நான்காம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, திருவாரூர்
615) தி.தளபதி, எட்டாம் வகுப்பு, தேசிய மேல்நிலைப் பள்ளி, வடுவூர்
616) சு.பிரீத்தி, நான்காம் வகுப்பு, ஞானாம்பிகா உதவி தொடக்கப் பள்ளி, வடகாடு
617) அ.கண்ணன், ஏழாம் வகுப்பு, ஆர்.கே.ஆர்.மேல்நிலைப் பள்ளி, உடுமலைப்பேட்டை
618) மா.கிரிவாசன், ஐந்தாம் வகுப்பு, ஏ.என்.டி.மெட்ரிக் பள்ளி, திருப்பத்தூர்
619) ஆர்.ஐஸ்வர்யா, முதல் வகுப்பு, கலைமகள் கல்வி நிலையம், ஈரோடு
620) ஜி.விக்னேஷ், எட்டாம் வகுப்பு, சு.வி.உ.நி. பள்ளி, சிலுக்குவார்பட்டி

621) ஆர்.சதன், ஐந்தாம் வகுப்பு, வையாபுரி மே.நி.பள்ளி, திருநெல்வேலி
622) எம்.எஸ்.ஷண்முக ப்ரியா, நான்காம் வகுப்பு, ஜெயராணி மெட்ரிக் மேல் நிலைப் பள்ளி, சேலம்
623) ஆர்.சந்திரசேகரன், நான்காம் வகுப்பு, பாலபாரதி மழலையர் தொடக்கப் பள்ளி, கொத்தாம்பாடி
624) பா.சுதர்ஸன், எட்டாம் வகுப்பு, நல்மேய்ப்பர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி திருச்சிராப்பள்ளி
625) ரா.வைஷ்ணவி, நான்காம் வகுப்பு, அமிர்தா வித்யாலயம், செகந்திராபாத்
626) கே.எம்.சாந்தி, நான்காம் வகுப்பு, கிரைஸ் த கிங் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கும்பகோணம்
627) பி.கே.அனுஜித், எல்.கே.ஜி., எக்சல் சென்ட்ரல் பள்ளி, திருவட்டார்.
628) ப.ரவிக்குமார், ஆறாம் வகுப்பு, அரவிந்தர் மெட்ரிக் பள்ளி, வடபுழுதியூர்
629) வெ.ஸ்ரீஜித், மூன்றாம் வகுப்பு, ஸ்ரீவாகீச வித்யாஷ்ரம், ஸ்ரீரங்கம்.
630) ஜி.மஞ்சரி, எல்.கே.ஜி., ஏ.ஆர்.ஜி.எஸ்.பிரைமரி பள்ளி, கிருஷ்ணகிரி
631) எஸ்.ஆலன்பால் ஜெயந்த், ஏழாம் வகுப்பு, டி.ஈ.எல்.சி. மேல்நிலைப் பள்ளி, புதுக்கோட்டை
632) ப.சரண்யா, ஒன்பதாம் வகுப்பு, தி.ப.தி.அ.தேசிய மேல்நிலைப் பள்ளி, மயிலாடுதுறை
633) என்.எம்.ஸ்ரீநாத், ஏழாம் வகுப்பு, ஸ்ரீ சத்யசாய் இன்ஸ்டிடியூட் ஆப் எஜுகேர், சென்னை
634) சு.தீபன் பொன்வண்ணன், இரண்டாம் வகுப்பு, ஸ்ரீராமகிருஷ்ண சிதம்பரேஸ்வரர் மெட்ரிக் பள்ளி, உடன்குடி.
635) என்.நர்மதா, ஆறாம் வகுப்பு, க்ளுனி பெண்கள் மே.நி. பள்ளி, புதுச்சேரி
636) பி.கே.அபிலாஷ், இரண்டாம் வகுப்பு, எக்சல் சென்ட்ரல் பள்ளி, திருவட்டார்
637) மு.இளம்பரிதி, எட்டாம் வகுப்பு, பாரதி மேல்நிலைப் பள்ளி, நாமக்கல்
638) சா.இருதய ரோஸ்ரின், ஏழாம் வகுப்பு, காயல்பட்டிணம் ஆறுமுகநேரி மேல்நிலைப் பள்ளி, ஆலந்தலை
639) கே.பி.விஷ்வநாத், முதல் வகுப்பு, வேல்ஸ் வித்யாஷ்ரம், சென்னை
640) மூ.கௌசிகன், ஆறாம் வகுப்பு, கங்கார் பூலாய்த் தமிழ்ப் பள்ளி, ஜொகூர், மலேசியா
641) வி.அரவிந்கணபதி, பால்வாடி, புதுக்கோட்டை
642) வ.பெர்னாட்ஷா, ஏழாம் வகுப்பு, புனித வளன் மேல் நிலைப் பள்ளி, மணப்பாடு
643) நா.அபிநயா, ஒன்பதாம் வகுப்பு, அரசு மகளிர் உயர் நிலைப் பள்ளி, நெகமம்



கோகுலம் சிறுவர் சங்கம் - கூப்பன்

என் பெயர் : ....

வயது : ....

பெற்றோர் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

புகைப்படம்

: ....

வீட்டு முகவரி : ....

....

....

நான் கோகுலம் சிறுவர் சங்கத்தின் உறுப்பினராகச் சேர விரும்புகிறேன். உங்கள் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்கிறேன்.

(கையொப்பம்)

இதுவரை கோகுலம் சிறுவர் சங்கத்துக்கு கூப்பன் அனுப்பாதவர்கள் உடனே அனுப்புங்கள். உங்கள் நண்பர்களுக்கும் விஷயத்தைச் சொல்லி, அவர்களையும் உறுப்பினராக்குங்கள்!

644) கே.தனசேகர், ஒன்பதாம் வகுப்பு, காமராஜ் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்

645) ர.மனு வந்த்ரா, இரண்டாம் வகுப்பு, ந.தே.ஜெ.அ. விவேகானந்தா வித்யாலயா, சென்னை

646) எ.ஐ.தஸ்லீம் பாத்திமா, ஐந்தாம் வகுப்பு, நசரேத் பெண்கள் துவக்கப் பள்ளி, சேலம்

647) பி.கமல்நாத், எட்டாம் வகுப்பு, ஸ்ரீவாசவி வித்யாலயா பதிண்ம பள்ளி, நாமகிரிப்பேட்டை

648) எம்.ஜி.சண்முகப்ரியா, நான்காம் வகுப்பு, டி.வி.எஸ். மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, மதுரை

649) கா.அருணாச்சலம், எட்டாம் வகுப்பு, டேனிஷ்மிஷன், மேல்நிலைப் பள்ளி திருவண்ணாமலை

650) த.அகிலன், ஐந்தாம் வகுப்பு, அமுதம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, மதுரை



அழகப்பனின் ஆராய்ச்சி!

கதை : திருவாழத்தான். படம் : ராம்கி




கால்கள் கருகி இருந்ததால் கரிகாலன் என்று அழைக்கப்பட்டார்.
ஐயா, ஓர் ஐயம்!
அழகப்பன் புத்திசாலி மாணவன்.
சொல் அழகப்பா... என்ன ஐயம்?
உடலில் தீ பற்றி காயம் ஆறிய பிறகு அந்த இடம் கருமையாக இருக்காது. வெளுத்து இருக்கும்.
இதுபோல் பலரைப் பார்த்ததுண்டு. ஆகவே, கரிகாலனின் இந்தப் பெயருக்கு வேறு கார ணம் இருக்கலாம்.
வேறு காரணமா... அது என்ன?
கரி என்பதற்க்கு யானை என்றும் பொருள். அதாவது, யானைக் காலன் என்று இருக்கலாம்.
எப்படிச் சொல்கிறாய்?


அப்போதும் கொசுக்கள் இருந்திருக்கும். இளவரசன் குடிசைப் பகுதியில் மறைந்து வாழ்ந்ததால் சுகாதாரக் குறைவால் இந்நோய் வந்திருக்கும்.
ஆஹா ஹா... ஹா... நல்ல ஆராய்ச்சி!
மற்ற மாணவர்கள் கேலியாகச் சிரித்தனர்.
சிரிக்காதீர்கள்! இவன் சொல்வது உண்மையோ பொய்யோ, ஒரு விஷயத்தை அப்படியே ஏற்காமல் கேள்வி எழுப்பினான்...
...வேறு எப்படி இருக்கலாம் என்று யோசித்தான். மாற்றி மாற்றி யோசிக்கையில்தான் உண்மை தெரியும். அழகப்பா, இந்தக் கருத்தை நமது அரசுக்கு எழுதுகிறேன்.
மாணவர்கள் கைகளைத் தட்டி பாராட்டினர்.

வலியவனுக்கு அவனே துணை மெலியவனுக்கு ஆண்டவன் துணை என்பதை அழகாய் உணர்த்தியது 'துறவியின் சாட்சி' சிறுகதை!

- ஆர்.பி.வளர்மதி, செல்லமருதூர்

சென்ற இதழில் வெளியான 'வெட்டுங்க ஒட்டுங்க' பகுதி எங்கள் கற்பனைத் திறனை தூண்டுவதாக அமைந்தது.

- அ.க.அப்சானா பர்வீன், திருச்சி


ஆனால், இந்த இதழில் வாழைப் பழத்தின் குணங்களைப் பற்றிப் படித்தவுடன் சாப்பிட ஆரம்பித்து விட்டேன்.

- பி.சர்வேஸ்வரன், மதுரை

கிருத்திகா அக்கா போன்று மரத்தை நேசிப்பவர்கள் நம் நாடு முழுவதும் இருந்தால் சுற்றுச்சூழல் பாதுகாக்கப் படுவதோடு சூழல் மாசும் தடுக்கப்படும் என்பது உறுதி!

- ஜி.எம்.மஞ்சரி, கிருஷ்ணகிரி

வலியவன்... மெலியவன்...



உத்தரப்பிரதேச மாநிலத்தின் தலை சிறந்த சுற்றுலா தலங்கள், தலைவர்கள், முக்கிய திருவிழாக்கள் கொண் டாடப்படும் முறை போன்ற பல்வேறு தகவல்களை தந்து அசத்திவிட்டீர்கள்!

- எம்.சிவரஞ்சனி, திருவாரூர்

எனக்கு வாழைப்பழமே பிடிக்காது.

விலைவாசி உயர்வால் வெல வெலத்துப்போயிருக்கும் பெற்றோர்க்கு அனுசரணையாகச் சிக்கனத்தைக் கடைப் பிடிக்க யோசனை கூறும் 'கோகூ'வின் கருத்து பாராட்டத்தக்கது!

- ச.ஆ.கேசவன்,
இனாம்மணியாச்சி


வீர சிவாஜி

இந்தியாவின் மூன்றாவது பெரிய மாநிலம், (ஏறத்தாழ இத்தாலி நாட்டின் பரப்பளவுக்குச் சமமானது) மக்கள் தொகை அடிப்படையில் இரண்டாவது மாநிலமாக இருப்பது மகாராஷ்டிரா. இந்தியாவின் தொழில் வளர்ச்சியில் மிக முக்கியமான மாநிலமாகவும் விளங்குகிறது. பம்பாய் என்று அழைக்கப்பட்ட இன்றைய மும்பை, மகாராஷ்டிராவின் தலைநகரமாகும். இங்கே விவசாயம் முக்கிய தொழில் என்றாலும், தொழில் வளர்ச்சியும் அபரிமிதமாக ஏற்பட்டிருக்கிறது. மாநிலத்தின் மொத்த மக்கள்தொகை சுமார் ஒன்பது கோடியே எழுபது லட்சம்! முக்கிய மொழிகள்: மராத்தி, இந்தி மற்றும் ஆங்கிலம்.

சமஸ்கிருதத்திலிருந்து மருவி வந்த மகாராஸ்திரி என்பதே மராத்தி என்று மாறியதாக மொழி வல்லுனர்கள் கூறுகிறார்கள். கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் மகதப் பேரரசின் கீழ் இருந்த நிலப்பகுதி, பின்னர் மௌரியர்கள், சாதவாகனர்கள், சாளுக்கியர்கள், யாதவர்கள் என்று மாறி 13ஆம் நூற்றாண்டில் முகலாயர்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. தமது 16ஆம் வயதில் மொகலாயர்களை எதிர்த்துப் போரிட்டு தம் நாட்டு மக்களை அவர்கள் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்க சபதம் ஏற்றார் சிவாஜி. படைகளைத் திரட்டி, மொகலாய மன்னர்களுடன் கடுமையாகப் போரிட்டு, 1647ல் பூனா பகுதியையும் மேலும் இரண்டு கோட்டைகளையும் கைப்பற்றி, மராத்திய சாம்ராஜ்ஜியம் அமைய வித்திட்டார். 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் மராத்திய மன்னரான பாஜிராவ் பேஷ்வாவுக்கும் ஆங்கிலேயப் படைகளுக்கும் இடையிலான போரின் முடிவில், ஆங்கிலேயர்கள் ஆட்சி ஏற்பட்டது. இந்தியாவின் மேற்குப் பகுதி, மும்பையைத் தலைநகரமாகக் கொண்ட 'மும்பை ராஜதானி' என்று அழைக்கப்பட்டது. இது இன்றைய பாகிஸ்தானின் கராச்சி முதல், இந்தியாவின் வட தக்காண பீடபூமி பகுதிவரை விரிந்திருந்தது.



இருபதாம் நூற்றாண்டில், இந்தியா முழுவதும் சுதந்திரப் போராட்டம் நிகழ்ந்த சமயத்தில், முன்னணியில் இருந்தவர்களில் மும்பை பகுதியைச் சேர்ந்த பாலகங்காதர திலகர், மகாதேவ கோவிந்த ரானடே, கோபால கிருஷ்ண கோகலே,



* கேட் வே ஆஃப் இந்தியா

வாழ்ந்த மண்!

பிரோஸ்ஷா மெத்தா, தாதாபாய் நௌரோஜி போன்றவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள். மகாத்மா காந்தியின் ''வெள்ளையனே வெளியேறு'' போராட்டம் மும்பை ராஜதானியில் பெரிய அளவில் நடந்தது. நாடு சுதந்திரம் அடைந்த பிறகு, இன்றைய மகாராஷ்டிரா, குஜராத் ஆகிய இரு மாநிலங்களும் ஒருங்கிணைந்து ஒரே மாநிலமாக அமைந்தது. மொழி வாரியாக மாநிலங்கள் பிரிக்கப் பட்டபோது, மேற்கு இந்தியாவின் மராத்தி பேசும் பகுதிகள் ஒருங் கிணைக்கப்பட்டு, குஜராத் தனி மாநிலமாகிவிட, 1960ஆம் ஆண்டு



* அஜந்தா...

-கௌதம்ராம்

மே மாதம் முதல் தேதி மகாராஷ்டிரா மாநிலம் உருவாக்கப்பட்டது.

மகாராஷ்டிர மாநிலத்தின் நாக்பூர் மற்றும் அமராவதி பகுதிகளுக்கு 'விதர்பா' என்று பெயர். அரபிக்கடலை ஒட்டிய தென் பகுதி 'கொங்கண்' என்று அழைக்கப்படுகிறது. ஔரங்கபாத் பகுதிக்கு 'மராத்வாடா' என்று பெயர். இம்மாநிலத்தின் கடற்கரைப் பகுதி சுமார் 700 கி.மீ. தூரத்துக்கு அமைந்துள்ளது.



• டோலாக்...

அதிக எண்ணிக்கையில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் நகரங்களுள் மும்பையும் ஒன்று. அரபிக்கடலை ஒட்டி இந்தோ-சார்சனிக் கட்டடக் கலை பாணியில் கம்பீரமாக எழுந்து நிற்கும் "கேட் வே ஆஃப் இந்தியா" சுற்றுலாப் பயணிகள் பார்க்க வேண்டிய இடம். இங்கிலாந்து மன்னர் ஐந்தாம் ஜார்ஜ், ராணி மேரியுடன் இந்தியாவுக்கு வருகை புரிந்ததைச் சிறப்பிக்கும் விதமாக, இது கட்டப்பட்டது. இங்கிருந்து கடலில் சுமார் பத்து கி.மீ. தொலைவில் அமைந்துள்ளவை 'எலிபென்டா' குகைகள். இங்கே உள்ள உலகப் புகழ் வாய்ந்த ஐந்தாம் நூற்றாண்டு சிற்பங்களில் பல, போர்கள் காரணமாக சிதைவுற்றுவிட்டன. மகாராஷ்டிரா முழுவதுமாக சுமார் 175 கோட்டைகள் உள்ளன. ஔரங்கபாத் அருகில் உள்ள அஜந்தா மற்றும் எல்லோரா சிற்பங்களும் உலகப் புகழ் வாய்ந்தவை. 1933ஆம் ஆண்டில் மகாத்மா காந்திஜியால் துவக்கப்பட்ட ஆசிரமம் வார்தாவில் உள்ளது. பதினைந்து ஆண்டுகள் மகாத்மா இங்கே வசித்தார். 'ராம்தெக்' நகரில் பல நூற்

• லாவுணி...



றாண்டு பழைமையான கோயில்கள் உள்ளன. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நாசிக்கில் கும்பமேளா நடைபெறும். மேலும் மகாராஷ்டிராவில் பல தேசிய பூங்காக்கள், வன விலங்கு சரணாலயங்கள் உள்ளன.



* எலிபெண்டா...

மராத்தியர்கள் ஆண்டுதோறும் பல முக்கிய பண்டிகைகளைக் கொண்டாடி வருகிறார்கள். சுதந்திரப் போராட்ட காலத்தில் இந்திய மக்களை ஒருங்கிணைக்க, திலகர் விநாயகர் சதுர்த்தியை மாபெரும் திருவிழாவாகக் கொண்டாடினார். அந்த பாரம்பரியம் இன்றும் மகாராஷ்டிராவில் குறிப்பாக, மும்பையில் தொடர்கிறது. பாம்புகளை வழிபடும் நாக பஞ்சமி, முழு நிலவை வழிபடும் நாரலி பூர்ணிமா (நாரல் என்றால் தேங்காய். அன்று கடலுக்கு பூஜை செய்து தேங்காயைப் படைப்பார்கள்) வெல்லம், வேம்பு இரண்டையும் வைத்து வழிபடும் 'குடி பட்வா' என்ற புத்தாண்டு, தசரா, தீபாவளி, மகர சங்கராந்தி, ஹோலி போன்ற பண்டிகைகளை ஆட்டம், பாட்டங்களுடன் கோலாகலமாகக் கொண்டாடுவார்கள். தவிர, ஆண்டுதோறும், பூனாவில் ''பூனா திருவிழா'' என்ற பெயரில் கலை, கலாசாரத் திருவிழா நடத்தப்படுகிறது. அதேபோல நாக்பூரில் மகாகவி காளிதாசர் பெயரில் நவம்பர் மாதத்தில் திருவிழா நடத்தப்படுகிறது.

மகாராஷ்டிர மாநிலத்தின் சட்டமன்றம் இரண்டு அவைகளைக் கொண்டது. சட்டமன்றப் பேரவைக்கு 'விதான் சபா' என்றும், சட்டமன்ற மேலவைக்கு 'விதான் பரிஷத்' என்றும் பெயர்.

இந்தியாவின் தொழில்வளம் மிகுந்த மாநிலங்களில் மகாராஷ்டிராவும் ஒன்று. ஜவுளி, ஆட்டோமொபைல் மற்றும் ரசாயனத் தொழிற்சாலைகள் இங்கே மிகுதியாக உள்ளன. ஏற்றுமதியை ஊக்குவிக்கும் வண்ணம், ஐந்து சிறப்பு ஏற்றுமதி மண்டலங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்தியாவின் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் ஒட்டுமொத்த பொருட்களின் மதிப்பில் 23சதவிகிதம் மகாராஷ்டிராவிலிருந்து வருகிறது. சர்க்கரை உற்பத்தியிலும் மகாராஷ்டிரா முன்னணி வகிக்கிறது. கடந்த பத்து ஆண்டுகளில் பெட்ரோ கெமிக்கல்ஸ், பதப்படுத்தப்பட்ட உணவு, மருந்துப் பொருட்கள் உற்பத்தி, எலக்ட்ரானிக்ஸ் மற்றும் பிளாஸ்டிக் தொழிற்சாலைகள் மிகுதியான அளவில் இயங்கி வருகின்றன.

'டோலாக்' என்ற தோல் வாத்தியக் கருவி இசைக்க, பெண்களால் ஆடப்படும் நடனம் லாவுணி! ஒன்பது கெஜம் புடைவையும், பலவித ஆபரணங்களும் அணிந்து ஆடும் இந்த நடனம், இன்றும் திருவிழாக்களில் முக்கியமாக இடம் பெறுகிறது. மகாராஷ்டிராவில் 16ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட கிராமிய நடனம் 'தமாஷா'. மீனவ இன மக்களின் நடனத்துக்குப் பெயர் 'கோலி'. மராத்திய பழங்குடி மக்களின் ஓவியங்களுக்கு 'வார்லி' ஓவியங்கள் என்று பெயர். கோலாப்பூரில் தயாரிக்கும் கைவேலைப்பாடு மிகுந்த காலணிகளுக்கு 'கோலாபுரி காலணிகள்' என்று பெயர்.

நகைச்சுவை நாயகன் மிஸ்டர் பீன்



ஹலோ குழந்தைகளே! போன மாதம் உங்களைக் கவர்ந்த 'டோரா'வைப் பத்தித் தெரிஞ்சுக்கிட்டீங்க. இந்த மாதம் இன்னொரு ஹீரோவைப் பத்தித் தெரிஞ்சுக்குவோம்!

உலகத்திலேயே ரொம்ப கஷ்டமான விஷயம் என்ன தெரியுமா? சிரிக்க வைக்கறது. எல்லோருக்குமே ரொம்ப இஷ்டமான விஷயம் சிரிச்சுட்டு, சந்தோஷமா இருக்கறதுதான். பிறரைச் சந்தோஷப்படுத்தற இந்த நகைச்சுவையைப் பலபல சுவைகளில் கொடுத்தவர் மிஸ்டர்.பீன்.

மிஸ்டர் பீனோட சொந்த பெயர் 'ரோவன் அட்கின்சன்' (Rowan Atkinson). இவர் மக்களைக் கவர 'மிஸ்டர் காலிபிளவர்' என்ற பேரைக் கூட செலக்ட் பண்ணி வைத்திருந்தார். கத்தரிக்காய், வெண்டைக்காய், தக்காளின்னு எவ்வளவோ பெயரை யோசிச்சாலும், நம்ம 'ரோவன் அட்கின்சன்' சாருக்குக் கடைசியா கைகொடுத்தது 'மிஸ்டர் பீன்'

மிஸ்டர் பீன் தொடர் ஜனவரி 1, 1990-ல் இங்கிலாந்தில் ஒளிபரப்பானது. இதை உருவாக்கியவர்கள் 'ரோவன் அட்கின்சன்' மற்றும் 'ரிச்சர்ட் கர்டிஸ்'. இதில் மிஸ்டர் பீனாக ரோவன் அட்கின்சனே நடிக்க ஆரம்பித்தார். தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் ஒளிபரப்பாகி பிரிட்டனில் அனைவரையும் கவர்ந்தது. இறுதியாக, 'குட் நைட் மிஸ்டர் பீன்' என்னும் தொடர் அக்டோபர் 31, 1995 வெளியானது.

மிஸ்டர் பீன் காமெடிக்கு அடிப்படையாக அமைந்தது அவருக்குள் இருக்கும் 'குழந்தை மனசு'தான்! பெரிய ஆளாக வளர்ந்தாலும்,

குழந்தைகளின் மனநிலையோடு செயல்படுவதுதான் இந்த நகைச்சுவைக்கு அடிப்படை.


ரோவன் அட்கின்சன், ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் எம்.எஸ்ஸி படிக்கும்போதே, 'மிஸ்டர் பீன் கதாபாத்திரத்தை உருவாக்கும் முயற்சியில் இறங்கினார். இதேபோன்று நகைச்சுவையான 'ராபர்ட் பாக்ஸ்' என்ற கதாபாத்திரத்தில் 1979-ல் நடித்தார். மிஸ்டர் பீன் பாத்திரத்தை உலகுக்கு அரங்கேற்றும் முன் பல்வேறு சோதனை முயற்சிகளை மேற்கொண்டார். 1987ஆம் ஆண்டு கனடாவில் நடைபெற்ற நகைச்சுவைத் திருவிழாவில் மிஸ்டர் பீன் பாத்திரத்தை மெருகேற்றினார். ''எல்லாம் சிரிப்புதான்'' (ஜஸ்ட் ஃபார் லாஃப்ஸ்) என்று தலைப்பிட்ட அந்த நிகழ்ச்சியில் பிரெஞ்ச் மொழியில் பேசுவதாக அறிவித்தார். ஆனால், முழுக்க முழுக்க அங்க அசைவுகளால் காமெடி செய்து அனைவரையும் கவர்ந்தார். இதன் மூலம் மொழியின்றி அங்க அசைவுகளால், செய்கைகளால் உலக மக்களை ரசிக்க வைக்க முடியும் என்ற உண்மையை உணர்ந்தார்.

மிஸ்டர் பீன் எப்படி இருப்பார்? முட்டையான கண்கள், நீண்ட கிளி மூக்கு, மெல்லிய ஒல்லியான உடம்பு, குழைய குழையச் சிரிக்கும் மழலைச் சிரிப்பு. இந்தத் தோற்றம் செய்யும் குறும்புகள் எல்லோரையும் குதூகலத்தில் ஆழ்த்தும். மிஸ்டர் பீன் கோமாளியாய்ப் போடுகின்ற ஆட்டம் சாதாரண கோட் சூட் உடையில் இருக்கும். எனவே, இயல்பான தோற்றம், சிறப்பான காமெடி என்னும் மன நிறைவைப் பார்ப்போருக்குத் தருகின்றது.

மிஸ்டர் பீனின் உற்ற தோழனாக விளங்குவது கரடி பொம்மை.

பீன், டெட்டி பிய ரோடு பேசுவதுபோலச் செய்கின்ற பாவனைகள் குழந்தைகளை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தும். மிஸ்டர் பீனின் பயணத்தில் அவ்வப்போது இணைந்து வருவது அவரின் கார் 'மினி'. இந்த அழகான மினி காரில் பீன் செய்யும் குறும்புகள் ஏராளம். மிஸ்டர்







பீனின் தோழியாக நடித்தவர் 'மெட்டில்டா சில்கர்'. இதில் பீன் அவர்கள் தன் தோழியைப் பார்த்துப் பொறாமை கொள்பவராக வருவார். அதன் மூலம் வெளிப்படுகின்ற நகைச்சுவை மகிழ்ச்சியின் உச்சத்தைத் தரும்.

'நீச்சல் குளத்துக்குச் செல்லும் மிஸ்டர் பீன்' தொடரில் அவர் செய்யும் குளக்கரை சாகசங்கள் பார்ப்பவர்களை வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும். 'மிஸ்டர் பீன் மீட்ஸ் த குயின்' படத்தில் அவரின் குறும்புகள் எல்லாம் அருமை. சர்ச்சில் நடைபெறுகின்ற திருமணத்தில் மிஸ்டர் பீன் செய்கின்ற நையாண்டி சிரிக்க மறுப்பவர்களையும் சிரிக்க வைக்கும். இது 'மிஸ்டர் பீன் அண்ட் வெட்டிங்' என வெளிவந்தது. இன்னும் 'மிஸ்டர் பீன் அண்ட் ரெஸ்ட்டாரண்ட்', 'தேர்வுக்குச் செல்லும் மிஸ்டர் பீன்', 'மிஸ்டர் பீன் இன் டாய்லட்', 'இரயிலை ஓட்டும் மிஸ்டர் பீன்' என ரோவன் தரும் சிரிப்பு வெடிகள் மக்கள் புகழ் பெற்றவை.

மிஸ்டர் பீன் முதல் எபிசோடே 'கோல்டன் ரோஸ்' என்னும் மிகப் பெரிய விருதைப் பெற்றது. 'த கர்ஸ் ஆஃப் மிஸ்டர் பீன்' என்னும் தொடர் பல்வேறு 'பாப்டா' விருதுகளுக்குப் பரிந்துரைக்கப்பட்டது. 1991ஆம் ஆண்டு 'சிறந்த பொழுது போக்கு நிகழ்ச்சி'க்கான விருதையும் 1992ஆம் ஆண்டு 'சிறந்த நகைச்சுவை



நிகழ்ச்சி'க்கான விருதைப் பெற்றது. மிஸ்டர் பீனாக வருகின்ற 'ரோவன் அட்கின்சன்' 1991, 1992 மற்றும் 1994 ஆண்டுக்கான விருதுகளையும் பெற்றார். நார்வே நாட்டின் சிறந்த காமெடியன் விருதும் கிடைத்தது.

பிரிட்டனில் தொடங்கி, உலகின் பல்வேறு நாடுகளில் மிஸ்டர் பீன் வெற்றிக்கொடி நாட்டியுள்ளார். திரைப் படங்கள், தொலைக்காட்சித் தொடர்கள், கார்ட்டூன் அனிமேட்டட் படங்கள் என பல வடிவங்களில் மிஸ்டர் பீன் உலக மக்களின் இதயங்களில் இடம்பிடித்துள்ளார்!

சிரிப்பலை

''வீட்டில் பூனை வளர்த்தது தப்பா போச்சு!''

''ஏன்? என்ன ஆச்சு.''

''ஒரு எலிகூட இல்லேன்னு கம்ப்யூட்டர்ல உள்ள மவுஸைப் பிடுங்கிச் சாப்பிட்டுடுச்சு!''

- பா.விக்னேசுவரன், குட்டம்





''இன்னைக்கு வாத்தியார் கேட்ட ஒரு கேள்விக்கு 'டாண்டாண்'னு பதில் சொன்னேன்!''

''அப்படியென்ன கேள்வி கேட்டார்?''

''கோயில் மணி ஓசை எப்படி ஒலிக்கும்னு கேட்டார்!''

- சு.ஜெயகவிதா, திருத்தங்கல்

தாத்தாவைப் பிடிக்கும்!

''பேராண்டி, என்னோட 'மூக்குக் கண்ணாடி'யைத் தேடித் தர்றியா?''

''எதுக்கு தாத்தா?''

''அதைப் போட்டுக்கிட்டு, 'பல் செட்டை' தேடி எடுக்கத்தான்!''

- அனன்யா, திருச்சி

''உனக்கு ஸ்கூல்ல எந்த டீச்சரை ரொம்ப பிடிக்கும்?''

''ஸ்கூல் பெல் அடிக்கிற தாத்தாவைதான் பிடிக்கும்!''

- ச.ஆ.கேசவன், இனாம் மணியாச்சி







பரிசு ரூபாய் 1000/-

இங்கே ஐந்து கேள்விகள் கேட்கப் பட்டுள்ளன. விடைகளை நீங்கள் எங்கும் தேடிச் செல்ல வேண்டாம். இதே இதழில்தான் உள்ளன. அவற் றைக் கண்டுபிடித்து எழுதுங்கள். கூப் பனையும் பூர்த்தி செய்து இந்தப் பக்கத் தைக் கத்தரித்து அனுப்புங்கள்.

ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

முடிவு தேதி: 16.8.2008

போட்டி

அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர், கோகுலம், (பரிசுப் போட்டி)

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 32

விடையைச் சொல்; பரிசை வெல் - 14

1. பீஜிங் ஒலிம்பிக்கில் கொடுக்கப்பட்டுள்ள லோகோவின் பெயர் ....
2. ஸ்ரீலக்ஷ்மிக்கு ரொம்ப பிடிச்ச சாமி ....
3. 'ஜிம் கார்பெட்' எழுதிய முதல் புத்தகத்தின் பெயர் ....
4. சண்முகத்துக்கு பரிசு கொடுத்த எழுத்தாளர் யார்? ....
5. மிஸ்டர் பீனின் தோழியாக நடித்தவர் ....

என் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

....

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


626


627


628


629


630


631


632


633


634


635


636


637


638


639


640


641


642


643


644


645


646


647


648


649


650

பெயர் மற்றும் விவரங்கள் 65 ஆம் பக்கம்

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN/CC(S)DN/109/06-08 • Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/47/06-08 • Registered as a Newspaper in Srilanka

